விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 320 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 17 ஞாயிற்றுக்கிழமை (03.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# ஆட்சி கவிழும் என ரணில் பகல் கனவு

## அமைச்சர் விஜித ஹேரத் சாடல்



(கொழும்பு) ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான இந்த ஆட்சி மூன்று மாதங்களுக்குள் கவிழும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு கண்டு கொண்டிருக்கிறார் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் அபிலாசைகளை ஜனாதிபதி சிதைத்துள்ளார்

## சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு) பொதுமக்கள் அபிலாசைகளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சிதைத்துள்ளார் என சஜித்பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள் 19

# மாவீரர் துயிலுமில்லங்களின் துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்) மாவீரர் தினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழர் தாயகத்தில் துயிலுமில்லங்களின் துப்புரவுப் பணிகள் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கான தயார்ப்படுத்தல் பணிகள் தற் 19

### வாரத்தில் 5 நாட்கள்

# யாழ்ப்பாணம் - நாகை கப்பல் சேவை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் காங்கேசன்துறை - நாகப்பட்டினத்திற்கிடையான கப்பல் சேவை 19

### செட்டிகுளத்தில்

# 12 எருமை மாடுகள் கடத்தல் முறியடிப்பு

(வவுனியா) வவுனியா செட்டிகுளம் பகுதியில் இருந்து மாத்தறைக்கு லொறி ஒன்றில் கடத்திச் 19

### யாழ்.கோண்டாவிலில்

# நல்லூர் பிரதேச சபை ஊழியர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் நல்லூர்ப் பிரதேச சபை ஊழியர் ஒருவர் 19










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



## கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் (கிட்டு)

(பொறியியலாளர், சமூக செயற்பாட்டாளர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 4

நான் இந்த மண்ணை காதலிக்கும் மண் மகள்,
இந்த மண்ணின் வலிகளை அனுபவித்த மண்ணின் மகள்,

நாங்கள் நேசிக்கும் எமது மண்ணின் மாண்பையும் மக்களின் வேட்கையையும் ஒரு போதும் விட்டுக்கொடேன்.

(045)



# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



அன்பான மக்களே!
நம்பிக்கையுடன் எங்களை ஆதரியுங்கள்!



வீ.ஆனந்தசங்கரி
(முதன்மை வேட்பாளர்)

இல. 8



செல்லையா
சுந்தரமூர்த்தி

தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)

X இல. 9

(039)

நேர்த்தியான நெடும் பயணம்!

1 2 3 4 5 6 7 8 9



# பாராளுமன்ற தேர்தல் - 2024

## வன்னி தேர்தல் மாவட்டம்

"அன்றும் இன்றும் என்றும் தடம் மாறாத தமிழ்த் தேசிய பயணத்தில்"



## வல்லிபுரம் கமலேஸ்வரன்

(முன்னாள் பிரதி அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை)
இணைப்பொருளாளர் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

மரியாதைக்குரிய அரச உத்தியோகத்தர்களே !
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் இணைப் பொருளாளருமான வன்னித் தேர்தல் மாவட்டத்தின் வெற்றி வேட்பாளர் வல்லிபுரம் கமலேஸ்வரன் அவர்களை உங்கள் பொன்னான வாக்குகளால் வெற்றிபெற செய்யுங்கள்.

X 8

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



## PickMe யாழ்ப்பாணத்தில்

நீங்கள் வைத்திருக்கும் CAR/ VAN/ Lorry/ Motorcycle அனைத்தையும் PickMe Taxi சேவையில் இலவசமாக இணைத்து அதிக வருமானம் பெறலாம்.

077 473 7737

அழைக்கவும்.

(015)


## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 3.35 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபபூஜை போன்றவை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரும் காட்சி இடம் பெறும் என ஆலய பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார்.

(6-8)


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306

(2547)


# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் அதீத பற்றுக் கொண்டவரும் ஆலய வளர்ச்சியில் காலத்துக்குக் காலம் பல்வேறுபட்ட திருப்பணிச் செயற்பாடுகளுக்கு பண உதவிகளை வழங்கியதுடன் தர்மகர்த்தா சபைக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி வந்தவருமாகிய

## அமரர் வைத்திலிங்கம் சற்குணம்

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு ஆழ்ந்த துயருறுவதுடன், துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகன் திருவடிகளைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு 02.06.1937 இறப்பு 30.10.2024

பிரிவால் துயருறும் : தர்மகர்த்தா சபை
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், கொக்குவில்.

(512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










## மனித உரிமை மீறல்;

# சர்வதேச அரங்கில் இலங்கையை நிறுத்த வேண்டும்

### வலியுறுத்தும் கனடா கொன்சவேட்டிவ் கட்சி

**(ஒட்டாவா)**

**ராஜபக்ஷக்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொலிவ்ர் வலியுறுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்மொழியப்பட்ட பிரேரணையை முற்றாக நிராகரித்திருப்பது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, "தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக நாம் குரல் கொடுக்க வேண்டும்.

அத்துடன், கொன்சவேட்டிவ் கட்சியின் ப்ரியன் மல்ரொனியே முதன்முறையாக தமிழர்களுக்கு கனடாவுக்குள் இடமளித்தார்.

தமது கட்சியைச் சேர்ந்த ஜோன் பெய்ர்ட் மற்றும் ஸ்டீவன் ஹார்பர் ஆகியோர் கடந்த கால அரசாங்கத்தினால் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் கொழும்பில் நடை பெற்ற பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்தனர்.

எனவே இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் கொன்சவேட்டிவ் கட்சி நீண்டகாலமாக நேர்மறையான விதத்தில் செயற்பட்டுவந்திருக்கின்றது.


அதுமாத்திரமன்றி தமிழினப்படுகொலையில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும்" என அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸ்ரோக்ஸ் சந்தேகம்

## ஐ.பி.எல் ஏலத்தில் பங்கேற்பது

இந்தியாவில், ஐ.பி.எல்., 18வது சீசன் அடுத்த ஆண்டு நடக்கவுள்ளது. இதற்கான வீரர்கள் மெகா ஏலம் இம் மாதம் நடக்கவுள்ளது. ஒவ்வொரு அணிகளும் தக்கவைக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட வீரர்களின் பட்டியலை வெளியிட்டது. இந்நிலையில் இங்கிலாந்து டெஸ்ட் கப்டன் பென் ஸ்ரோக்ஸ், இந்த ஏலத்தில் இருந்து விலகப் போவதாகக் கூறப்படுகிறது.



அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ஆஷஸ் (எதிர்: அவுஸ்திரேலியா), இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு தயாராவதற்காக ஏலத்தில் இருந்து விலக முடிவு செய்துள்ளார். கடைசியாக கடந்த ஆண்டு சென்னை அணிக்காக ஒரு சில போட்டிகளில் பங்கேற்ற ஸ்ரோக்ஸ், ஆஷஸ் தொடருக்காக இந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல்., 17ஆவது சீசன், ரி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்கவில்லை. தவிர இம்முறை, ஏலத்தில் ஒப்பந்தமாகும் வீரர், சரியான காரணமின்றி விலகினால், இரண்டு ஆண்டு தடை விதிக்கப்படும். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏலத்தில் இருந்து ஸ்ரோக்ஸ் விலகலாம். (ம-7)




பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)

மத்தியில் கூட்டாட்சி!
மாநிலத்தில் சுயாட்சி!



1

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)
(கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர், கட்சியின் ஊடகப் பேச்சாளர், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்)

உங்கள் முதன்மைத் தெரிவு
தோழர்
டக்ளஸ் தேவானந்தா
4

X

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (C-085)



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு.சி.கதிர்காமநாதன் அவர்களின்
அன்புத் தந்தை



## அமரர் சின்னத்தம்பி சின்னத்துரை

பிறப்பு : 20.08.1946 இறப்பு : 30.10.2024

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-1509)

யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் - பாடசாலைச் சமூகம்



# ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
# பாராளுமன்ற தேர்தல் - 2024

## வன்னித் தேர்தல் மாவட்டம்



X

1 2 3 4 5 6 7 8 9

# தி.இடபாருடன்

மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்



எங்கள் வன்னி
எங்கள் மக்களுக்கு



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 153 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- **பார்வையிடும் நேரம்**

காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (2553)
077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் சின்னம்

X 4

சுயேச்சைக் குழு - 2



கல்விக்காருண்யன் E.S.P. நாகரத்தினம் ஐயா அவர்கள் சமூக நலன் மேம்பாட்டிற்காக கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என மக்களுக்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது.

# E.S.P. நாகரத்தினம் கமலரூபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

தந்தை வழியில் தனையனும், மண்ணையும் மக்களையும் நேசிப்பதுடன் அரசியல் மூலம் மக்கள் பணிக்காக, ஆளுமையுள்ள இளைஞனாக, தலைமைத்துவம், முயற்சியாண்மை, கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என ஐந்து அம்ச அனுபவத்துடன் களத்தில் கமல்.

**களத்தில் கமல்,** தமிழர் பரப்பில் மக்கள் எதிர்பார்க்கும் ஆளுமையுள்ள புதியவர் இவர்... ஆளுமை மிக்கவர்களும், இளைஞர்களும் அரசியலை வெறுப்புடன் பார்க்கும் தருணத்தில் அதில் இருந்து மாறுபட்ட கோணத்தில் நம்பிக்கையுடன் கமலின் அரசியல் பயணம்...

**அரசியல் மூலம் மக்கள் பணி,** தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும். கடந்த 15 வருடங்களாக இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையும், எதிர்ப்பு அரசியல் என்ற பெயரில் வினைத்திறனற்ற செயற்பாட்டையும், சுயநலத்திற்காக பிளவுபட்ட கட்சிகளையும் விடுத்து நேர்மையான வினைத்திறனான அரசியலுக்கு...

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்,** தமிழர் பரப்பான வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய தமிழ்த்தேசியமான சுயத்திலும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் புலங்களான இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளையும் (உ-ம்: கொழும்பு) உலகெங்கும் பரந்து வாழும் நம் தமிழரை மையப்படுத்த, இங்கிருந்து...

**பாராளுமன்ற தேர்தல் - 2024,** சமூகத்தில் இளம் தொழில் முயற்சியாளராக 2016ஆம் ஆண்டு வணிகத் தொழிலிலும், 2018ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்டத்துறையிலும் கால்பதித்து சுயமாக தொழிற்பட்டு வந்தார். அந்த வேளையில் 2020ஆம் ஆண்டு முதலே மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் தேவையுள்ளதை அறிந்திருந்தும், தன்னை பொருளாதார ரீதியாகவும், சமூக மட்டத்தில் அனுபவ ரீதியாகவும், சமூகத்தை நன்கு அறியப்பட வேண்டிய தேவைப்பாடு கருதியும் பொறுமையுடன் அவதானித்து வந்தார். பின்னர் 2023ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் களமிறங்கி அறிமுகத்தை ஏற்படுத்திய போதும், 2025ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இலக்கை நோக்கி பயணித்த வேளையில், 2024ஆம் ஆண்டு எமக்கான நேரம்...

**மாற்றத்திற்கான நம்பிக்கை,** 1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு புதியதோர் மாற்று அரசியலும், மாற்று அரசியல் அணியை உருவாக்கக்கூடிய சிந்தனையாளர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் தேவைப்பாடு அவசியம். காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டுமே மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ள இந்நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அரசியல் அபிலாசைகளுடன் பொருளாதார வளமேம்பாட்டை நோக்கி...

**சுயேச்சைக்குழு - 2,** வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன், எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என தன் காலில் தான் நிற்றலே தமிழர்களுக்கான பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கும். ஓர் சீரமைக்கப்பட்ட தலைமைத்துவ கட்டமைப்பு அற்ற பல தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் பற்றாக்குறையே எனது சுயவிருப்பத்துடன் அரசியல் அறவழிப் பிரவேசம்...

**அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும், அரசியல் தீர்வும்:** சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் மற்றும் போராட்டங்கள் அறம் சார்ந்தவையாகவும், சுயாதீனமாகவும் ஓர் சீரான தலைமைத்துவ கட்டமைப்புடன் காணப்பட்டது. பேரினவாதம் மற்றும் பிரிவடைகின்ற தமிழ்த்தேசிய கட்சிகளினதும் வினைத்திறனற்ற செயலை மாற்றியமைத்தல். பெண் பிரதிநிதித்துவம், தொகுதி அடிப்படையிலான பிரதிநிதித்துவம் ஆகியவற்றை ஷமுதன்மைப்படுத்திய ஓர் கட்டமைப்பு...
அரசியல் தீர்வு என்ற போர்வையில் இழுத்தடிப்புக்களும், அபிவிருத்தி என்ற போர்வையில் திணிப்பு மற்றும் ஊழல் ஆட்சியே காணப்பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி சரியான நீரோட்டத்தில் இரண்டற பயணிக்க வேண்டும். அதனை மாற்றியமைக்க ஆளுமையுள்ள புதியவர்களை உள்ளடக்கிய மாற்று அணி தேவை...

**முயற்சியாண்மை:** வளமான நிலம், உழைக்கக்கூடிய மக்கள் தமிழர் பரப்பில் உள்ள நிலையில் தேவைப்பாடான மூலதனம் மற்றும் முயற்சியாண்மை கேள்விக்குறியாகவே உள்ளது...
இதற்காக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய பாரம்பரிய தொழில்களை மேம்படுத்துவதோடு சேவைத்துறைகளை (உ-ம்: சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல்) மையப்படுத்திய மூலதனம் மற்றும் முயற்சியாண்மைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல்...

**கல்வி:** ஆரம்பக்கல்வி, பாடசாலை, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதோடு அவற்றை இடைவிடாது தொழில் சார்ந்து பயணிக்ககூடிய வகையில் தொழிற்கல்வியை வழங்குதல்...
வாழ்வியல் தொடர்பான கல்வி நடவடிக்கைகள், ஆரோக்கிய வாழ்வு (சுகாதாரம்), போக்குவரத்து, பிள்ளைகள் தொடர்பான பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு என பலதரப்பட்ட கல்வி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்...

**விளையாட்டு:** மாணவப்பருவத்துடன் விளையாட்டில் உள்ள தமது ஆர்வத்தை இடைநிறுத்தாது சுய ஒழுக்கத்துடன் ஆரோக்கியமான வாழ்வியல் மற்றும் வணிக ரீதியாக செயற்படக்கூடிய ஓர் கட்டமைப்பை உருவாக்கல்...
கிராமம் முதல் நகரம் வரை விளையாட்டு செயற்பாடுகளை ஊக்குவிக்கும் ஓர் மையத்தினை (உ-ம்: மைதானங்கள்) ஏற்படுத்துவதன் மூலம் சமூக ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்தல்...

**கலை-கலாசாரம்:** எமது கலைச்செயற்பாடுகளை தொடர்ந்து நிகழ்த்துதல், புத்தாக்க செயற்பாடுகள், மீள் உருவாக்கம் என்ற அடிப்படையில் கட்டமைத்து தமிழர் பரப்பின் அடையாளமாக மாற்றியமைத்தல். மேலும் கலைஞர்களுக்கான அங்கீகாரத்தையும் எமது கலைகளையும் சர்வதேச மட்டம் வரை எடுத்துச் செல்லல்...
தமிழர் கலாசாரம் என்பது உலகெங்கிலும் போற்றப்படும் ஓர் விடயம். அதனது சுயாதீனத்தை இழக்காது தமிழர் பரப்பில் காணப்படும் கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்தல்...

**சுயேச்சை வேட்பாளர்**

பேரினவாதத்திற்கும், தமிழர் பரப்பில் உள்ள கட்சிகளின் பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே எனது அரசியல் பிரவேசம். அறவழியில் சுயவிருப்பத்துடன் தேர்தல் களத்தில் மேற்கூறப்பட்ட ஐந்து அம்ச ஆளுமையுடைய எனது வருகை மாற்றத்தை நோக்கி, மாற்று சிந்தனையுடன், மாற்று வழியில், மாற்றத்திற்கான நம்பிக்கை...

(047)

**"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன் எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்"**


களத்தில் கமல்

மாற்றத்திற்கான நம்பிக்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்







**கலாநிதி.தேவநாயகம் தேவானந்த்**
முன்னாள் யாழ்.பல்கலைக்கழக நாடக வளப் பயிற்சி மைய பணிப்பாளரும், முன்னாள் அரச சார்பற்ற இணையம் மற்றும் TRRO தலைவரும், நாடறிந்த நாடக ஆற்றுப்படுத்துகை அரங்க கலைஞரும்




**திரு.அ.சிவஞானசுந்தரம்**
கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியரும், சமூக மட்ட அமைப்புக்களின் தலைமை பிரதானி




**திரு.விநாசி கணபதி தங்கவேல்**
மூத்த தமிழ் தேசிய செயற் பாட்டாளரும், அறவழி போராட்டக் குழு மற்றும் ப.தெ.வ.அ.கூ.ச தலைவரும்




**செல்வி.டிபினிஜா ஜெயதாஸ்**
யாழ்.பல்கலைக்கழக மாணவி, கிராமிய தாய்மார், சிறார் நல செயற்பாட்டாளர்




**திரு.நல்லதம்பி பொன்ராசா**
முன்னாள் தினக்குரல் துணை ஆசிரியர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்




**திரு.நாகேந்திரம் புஸ்பவசந்தன்**
முன்னாள் வடமராட்சி பிரதேச சபை உறுப்பினர் மற்றும் காப்புறுதி முகாமையாளர்




**திருமதி.நீலலோஜினி ஜெகதீஸ்வரன்**
சட்டத்தரணி மற்றும் முன்னாள் மேலதிக தொழில் ஆணையாளர், நாயகம்





**திருமதி.மதியழகி இளமுருகன்**
முன்னாள் ஆசிரிய ஆலோசகர், சுயதொழில் முயற்சியாளரும் சமூக செயற்பாட்டாளரும்




**திருமதி.சிவநாதன் சத்தியலட்சுமி**
இளம் தொழிலதிபரும், தென்மராட்சி மகளிர்நல செயற்பாட்டாளரும்

**தமிழ் தேசிய சக்தி**
TAMIL NATIONAL POWER (TNP)
**தமிழர் சம உரிமை இயக்கம்**
THAMILAR SAMA URIMAI IYAKKAM

(சி-080)





Facebook: தமிழர் சம உரிமை இயக்கம்






ஈரோஸ் ஜனநாயக முன்னணி




மக்களால் நான் மக்களுக்காக நான்

(044)



# மணிவிழா நாயகியை

## சேவை நயந்து வாழ்த்துகின்றோம்




திருமதி.
**ரேணுகாதேவி கேசவன்**
(BA, PGDE (Merit) SLTS-I)
(பகுதித் தலைவர்
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்)

சேவை விபரம்

கொ/புனித அன்னம்மாள் பெண்கள் கல்லூரி, கொழும்பு-13 (16.04.1985-14.02.1988)
கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை (15.02.1988-31.12.1989)
யா/மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயம் (01.01.1990-06.05.1990)
யா/மகாஜனக் கல்லூரி-தெல்லிப்பளை (07.05.1990-15.01.2014)
யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (16.01.2014-02.11.2024)

எமது பாடசாலையின் க.பொ.த (உ/த) பகுதித் தலைவராகவும் தமிழ்ப்பாட ஆசிரியராகவும் பணியாற்றி 03.11.2024 அன்று ஓய்வு பெறும் **திருமதி. ரேணுகாதேவி கேசவன்** அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
**யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்,** (2548)



*The 71st Annual Festival of Carols by the*

**Combined Choirs of Schools and Colleges of the North**

Will be held at the St.John's College Hall on Saturday 09th November 2024 at 4.00 p.m.

*Admission: By Hymn Sheet - Rs.50/=*

(சி-1502) **Principal**


# சிறுநீரக, நீரிழிவு நோயாளர்களுக்கான ஊசிகளுக்கு தட்டுப்பாடு-சுகாதார அமைச்சு

(கொழும்பு)

சிறுநீரக நோய், கட்டுப்பாடற்ற நீரிழிவு மற்றும் கடுமையான நீரிழப்பு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சிக்கல்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் சோடியம் பைகார்பனேட் ஊசிகளுக்கு தட்டுப்பாடு இருப்பதாக சுகாதார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


தடுப்பூசிகள் தட்டுப்பாடு காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளிகளுக்கும், உடலுறுப்பு அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிப்பதில் வைத்தியர்கள் கடும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோடியம் பைகார்பனேட் தடுப்பூசியை உள்நாட்டில் தயாரிப்பதற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் அனுமதி கோரி ஒரு குறிப்பிட்ட நிறுவனம் சமர்ப்பித்த விண்ணப்பத்துக்கு ஒப்புதல் அளிக்க இரண்டு ஆண்டுகளானதே சோடியம் பைகார்பனேட் தடுப்பூசி பற்றாக்குறைக்கு முக்கிய காரணம் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மருத்துவ வழங்கல் பிரிவு நிறுவனத்திற்கு இதுவரை ஓடர்களை வழங்கவில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்நாட்டிலேயே தடுப்பூசிகளை தயாரித்து இறக்குமதி செய்யுமாறு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் மற்றுமொரு நிறுவனம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள போதிலும் இதுவரை அனுமதியும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (நி-8)


# விற்பனைக்கு




பருத்தித்துறை நகரில் கடை விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம்
12.00-1.00 மணிவரை
தொடர்பு கொள்ளும் நேரம்
9.00-4.00 மணிவரை
தரகர் தேவையில்லை

(2536)

தொடர்பு:- **077 344 3034**



**லங்கா மஹால் (PVT) LTD**

DHL

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

(490)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3374


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய்யின் அரசியல் அணுகுண்டு!



மிகுந்த எதிர்பார்ப்புகள், விண்ணதிர கர கோஷங்கள், புதிர் வியூகங்களோடு தன் முதல் அரசியல் மேடையில் ஏறியிருக்கிறார் விஜய். அவரது தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு, தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு புது அத்தியாயத்தை எழுதியிருக்கிறது. தி.மு.க கூட்டணிக்கு அதிகாரப் பகிர்வு உண்டு. நாம் தமிழர் கட்சிக்கு "தமிழ் தேசியமும் திராவிடமும் இரு கண்கள்" என்கிற குண்டு, அ.தி.மு.க-வுக்கு 'நானும் எம்.ஜி.ஆர் போல ஒரு கூத்தாடிதான்" என்கிற அணுகுண்டு என அடுத்தடுத்து பட்டாசுகளை வெடித்து, அரசியல் தீபாவளியைக் கொண்டாடியிருக்கிறார்.

### விஜய் சாலையாக மாறிய வி.சாலை!

ஒக்டோபர் 27ஆம் திகதி காலை ஏழு மணியிலிருந்தே, த.வெ.க-வின் 'வெற்றிக் கொள்கை மாநாடு" நடைபெற்ற வி.சாலை திணறத் தொடங்கிவிட்டது.

மாநாட்டுத் திடலில் விஜய் தங்கியிருக்கிறார் என்ற தகவல் கசிந்ததாலோ என்னவோ கூட்டம் கூட்டமாக தொண்டர்களும் ரசிகர்களும் திடலில் குழுமத் தொடங்கினர். விக்கிரவாண்டி டோல்கேட்டிலிருந்து மாநாட்டு வளாகம் வரை சுமார் ஏழு கிலோமீற்றருக்கு வாகனங்கள் வரிசைகட்டி நின்றன. காலை 11 மணிக்கெல்லாம் வாகன நிறுத்தத்திற்காக ஏற்பாடு செய்திருந்த 210 ஏக்கர் இடம் முழுவதுமாக நிரம்பிவிட்டது. அதன்பிறகு ஐந்து பார்க்கிங் இடங்களைக் காவல்துறை ஏற்படுத்திக் கொடுத்தும் கூட மதியம் 3 மணியளவில் அந்த இடங்களும் வாகனங்களால் நிரம்பின. வேறு வழியின்றி விக்கிரவாண்டி டோல்கேட்டிலிருந்து கூட்டேரிப்பட்டு வரையிலான சாலைப் பகுதியை த.வெ.க பயன்பாட்டுக்கென மொத்தமாக அளித்தது காவல்துறை. வி.சாலை விஜய் சாலையாக மாறிப் போனது.

பல கி.மீ இற்கு வாகனங்கள் நின்றபோதிலும் அந்த தூரத்தையும் வெயிலையும் கொஞ்சம் கூட பொருட்படுத்தாமல் நடந்தே மாநாட்டுத் திடலுக்கு வந்து சேர்ந்தார்கள் தொண்டர்கள். "பணம் கொடுக்காமல் தன்னெழுச்சியாக இவ்வளவு பெரும் கூட்டத்தை விஜய் திரட்டியிருக்கிறார்" என்பதே பெரும் ஆச்சரியம்தான். மாநாட்டுக்குச் சில நாட்கள் முன்னதாக 'குடித்துவிட்டு யாரும் வரக்கூடாது. அதைப் பொறுப்பாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும்" என உத்தரவிட்டிருந்தார் விஜய். அதை மதித்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு இடத்தில்கூட டாஸ்மாக் கடையின் வாசலில் த.வெ.க தொண்டர்கள் முண்டியடித்ததாகச் செய்தி இல்லை. பெரும்பாலான கூட்டம் 40 வயதுக்குக் கீழே இருப்பவர்கள்தான்.

டில்லி ஜோதிடர் கணித்துக் கொடுத்தபடி, சரியாக மாலை 4:04 மணிக்கு மேடையேறினார் விஜய். அதுவரை வெயிலிலும் காத்திருப்பிலும் சோர்ந்துபோயிருந்த மொத்தக் கூட்டமும் உற்சாகமாக ஆர்ப்பரித்தது. அதே உற்சாகத்தில் மேடைக்கு முன்பாக 800 மீற்றரில் அமைக்கப்பட்டிருந்த ரேம்பில் இறங்கி நடக்கத் தொடங்கினார் விஜய். அவரை நோக்கி உற்சாக மிகுதியில் கட்சித் துண்டுகளைத் தொண்டர்கள் வீசினர். ஒவ்வொரு துண்டையும் கேட்ச் பிடித்தும் கையில் எடுத்தும் தன் தோளில் மாலையாகப் போட்டுக் கொண்டார். மேடைக்குத் திரும்பியவர் அந்தத் துண்டுகளில் ஒரே ஒரு துண்டை மட்டும் எடுத்து அணிந்துகொண்டவர், மொத்தக் கூட்டத்தைப் பார்த்துவிட்டு கண்கள் கலங்கிப் போனார்.

### "சித்தாந்த எதிரி பிளவுவாதம்... அரசியல் எதிரி திராவிட மாடல்!"

மேடையில் ஐந்து இருக்கைகள் மட்டுமே போடப்பட்டிருந்தன. அதில் விஜய், பொதுச் செயலாளர் ஆனந்த், பொருளாளர் வெங்கட்ராமன், தலைமை நிலையச் செயலாளர் ராஜசேகர், கொள்கைபரப்பு இணைச் செயலாளர் தாகிரா ஆகியோர் அமர்ந்தனர். மாவட்டத் தலைவர்கள், மாநில நிர்வாகிகள், அணித் தலைவர்களுக்கெல்லாம் தனியாக ஒரு மேடையில் இருக்கைகள் அளிக்கப்பட்டிருந்தன. கட்சியின் கொள்கைகள், செயற்றிட்டங்களை நிர்வாகிகள் வாசித்தனர். மேடையில், அம்பேத்கர் பெயரைச் சொன்ன போதும் 'ஆளுநர் பதவி தேவையில்லை' எனச் செயற்றிட்டத்தில் வாசித்த போதும் கூட்டத்தில் விசில் பறந்தது.

தன் பேச்சைத் தொடங்குவதற்கு முன்னதாக மேடைக்கு எதிரே இறங்கிவந்து பெற்றோரிடம் ஆசி பெற்றார் விஜய். இயல்பாகப் பேச ஆரம்பித்து அடுத்தடுத்து வெடித்ததெல்லாம் தவுசண்ட் வாலா பட்டாசுகள்தான்.

"மக்கள் விரோத ஆட்சியை, திராவிட மாடல் ஆட்சி என்று கூறி மக்களை ஏமாற்றுகிறீர்கள். பிளவுவாத அரசியல் செய்பவர்கள் நமது கொள்கை எதிரி. திராவிடம், பெரியார், அண்ணா பெயரை வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டைச் சுரண்டும் ஒரு குடும்பச் சுயநலக் கூட்டம் நமது அரசியல் எதிரி" என்று பொரிந்து தள்ளினார் விஜய். சூரியன் அஸ்தமனம் ஆவதற்கும் விஜய் தன் பேச்சை முடிப்பதற்கும் சரியாக இருந்தது.

### அ.தி.மு.கவிற்கு அரவணைப்பு... அண்ணனுக்கு 'ஆப்பு!'

விஜய்யின் கன்னிப் பேச்சிலேயே பல கட்சிகளுக்கும் அடி விழுந்திருப்பது நிஜம். 'திராவிட மாடல்" 'குடும்ப ஆட்சி' என தி.மு.கவை வறுத்தெடுத்தவர், எந்த இடத்திலும் அ.தி.மு.க-வைச் சீண்டவில்லை. மாறாக "எம்.ஜி.ஆர் போல நானும் ஒரு கூத்தாடிதான்" என்றார். எம்.ஜி.ஆரை விஜய் கையில் எடுப்பாரென அ.தி.மு.க வட்டாரங்கள் யாரும் எதிர்பார்க்கவில்லை. அவர்களைப் போல எதிர்பாராமல் அடி வாங்கியிருப்பவர் நாம் தமிழர் கட்சியின் சீமான்தான். விஜய் தன் கட்சியைத் தொடங்கியதிலிருந்தே, 'தம்பி... தம்பி..." என உருகி மருகினார் சீமான். இருவரும் ஒன்றாக விஜய்யின் ரோல்ஸ் ராய்ஸ் காரில் பயணித்து, தமிழக அரசியல் சூழல் குறித்து விவாதித்ததாகவும் பேச்சு எழுந்தது. ஆனால் "திராவிடமும் தமிழ்த்தேசியமும் எங்களுக்கு இரு கண்கள்" என மாநாட்டு மேடையில் விஜய் பேசவும் ஜெர்க்காகிப்போனார்கள் நாம் தமிழர் தம்பிகள்.

### "அதிகாரப் பகிர்வு" அறிவாலயக் கூட்டணிக்கு குண்டு

தன் பேச்சில் விஜய் வீசியிருக்கும் பெருங்குண்டு 'ஆட்சியில் அதிகாரப் பகிர்வு' அவரே "இது ஒரு பெரிய அரசியல் அணுகுண்டுங்க" என்று அறிவித்து தன்னோடு கூட்டணிக்கு வருபவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு அளிக்கப்படும் என்பதை அறிவித்தார். அந்தக் குண்டு தி.மு.க கூட்டணிக்குள் பலமாக வெடித்திருக்கிறது.

இதுவரை திரை நட்சத்திரமாக ஜொலித்த விஜய், அரசியல் நட்சத்திரமாக மின்ன மேடையேறியிருக்கிறார். எதிர்பார்த்ததையும் தாண்டித் திரண்ட கூட்டமும் அவருடைய பேச்சும் பொது வாக்காளர்களிடம் பிரமிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. அதே நேரத்தில் அவர் முன்வைக்கும் கொள்கைகள், செயற்றிட்டங்கள் இன்னும் வெகுஜன வாக்காளர்களிடம் போய்ச் சேரவில்லை. தமிழகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளில் விஜய் என்ன பேசப் போகிறார் என்பதெல்லாம் இனி உன்னிப்பாகப் பார்க்கப்படும். அவர் மேடையில் சொன்னது போல, "இறங்கியாச்சு. இனி ரிட்டர்ன் இல்லை" என்பதுதான் யதார்த்தம்.


**களம் விஜய்க்காகக் காத்திருக்கிறது!**

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## இஞ்ச நடக்கிற பிரச்சினைகளை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துங்கள்



**வாத்**தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** அதுசரி மண்டைதீவில் படையினருக்குக் காணி சுவீகரிக்கும் பொருட்டு நில அளவை செய்வதற்கு அதிகாரிகள் உரிய இடத்திற்குச் சென்றபோது, அங்க கூடியிருந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால அளவைப் பணியைக் கைவிட்டு அதிகாரிகள் திரும்பினதாக அறிந்தன்.

முன்பும் இத்தகைய சம்பவங்கள் நடக்கிறது வழக்கம் தான்.

ஆனால் அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்பும் இப்படியான சம்பவங்கள் நடக்கிறதாக இருந்தால், மாற்றம் தேவை எண்டு மக்கள் சொல்லுறதில ஏதேனும் நியாயம் இருக்குதோ.

**விதானையார்:-** மூப்பர், மண்டைதீவில படையினருக்குக் காணி சுவீகரிக்கிறதுக்காக நில அளவை செய்வதற்கு அதிகாரிகள் பல தடவைகள் வந்து மக்களின்ர எதிர்ப்பை அடுத்துத் திரும்பிப் போனவியள்.

அந்தத் தொடர்ச்சியாக இப்பவும் காணி சுவீகரிப்பு நடக்குதே தவிர, மற்றும் படி அநுர குமார திசாநாயக்க கட்டளையிட்டு நடக்கிறதாக நாங்கள் நினைக்கக் கூடாது. உண்மையில இப்படியான சம்பவங்கள் நடக்கும் போது அதனை ஜனாதிபதி அநுரவின் கவனத்திற்குக் கொண்டு வரவேணும்.

ஆனால் ஜனாதிபதியோட கதைக்கிறதுக்கு எங்களிட்ட ஒருத்தரும் இல்லை.

**கங்காணி:-** விதானையார் சொல்லுறது நூறுவீதம் உண்மை.

இந்தாப்பாருங்க 34 ஆண்டுகளாகப் பூட்டிக் கிடந்த வசாவிளான் வீதியை ஜனாதிபதி அநுர குமாரதிசாநாயக்க திறப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார் தானே. முன்னைய ஜனாதிபதிகள் செய்யாத காரியத்தை இன்னொருவர் செய்வாராக இருந்தால், அதனை நாங்கள் வரவேற்கவேணும்.

**சாத்திரி:-** கங்காணியாற்ற கருத்துக்கு நானும் உடன்படுகிறன். இந்தாப் பாருங்க தீபாவளி திருநாள் அன்று மதுபானச் சாலைகளை மூடுமாறு விதித்த கோரிக்கையை ஜனாதிபதி அநுர ஏற்று அதனை உடனடியாக அமுல்படுத்தியிருந்தார்.

**பண்டிதர்:-** உண்மை தான். தீபாவளிக்கு முதல் நாள் மாலை 4 மணியளவில மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் எல்லா மதுபானசாலைகளுக்கும் தொலைபேசி அழைப்பை எடுத்து, நாளை தீபாவளி அன்று மதுபானசாலைகளை மூடிப்போடுங்க.

தப்பித் தவறி திறந்தியளோ பிறகு அது பெரும் பிரச்சினையாகிப்போகும் எண்டு சொல்ல, மறுநாள் எல்லா மதுபானசாலைகளும் இழுத்து மூடப்பட்டன.

இலங்கையின்ர வரலாற்றில தீபாவளிக்கு சாராயக்கடைகள் பூட்டினது இதுதான் முதல் தடவை.

இவ்வாறு சாராயக் கடைகள் பூட்டப்பட்டதால எவ்வளவு நிம்மதியாக இருந்தது.

**வாத்தியார்:-** அப்ப இனிவரும் காலங்களில ஒவ்வொரு தீபாவளி நாளிலும் சாராயக் கடைகள் பூட்டப்படுவதை உத்தியோகபூர்வமாக அறிவித்து அதை நடைமுறைப்படுத்த வேணும் எண்டு ஒரு தீர்மானத்தை எடுப்பம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவ, அமைதியைக் குலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** ஏற்கனவே இங்கு சொல்லப்பட்டது போல, வடக்கு-கிழக்குத் தமிழர் தாயகத்தில என்ன பிரச்சினை நடந்தாலும் அதனை ஜனாதிபதி அநுரவின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வருவதற்கு ஏதாவதொரு ஏற்பாடு இருக்க வேணும்.

**மூப்பர்:-** ஏன் சிறாப்பர் அந்தந்த மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் தானே!

**சிறாப்பர்:-** இல்லை மூப்பர். சில விடயங்களை ஆளுநர் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறுவதென்பது பொருத்தமில்லை.

அதிலும் ஆளுநர் தமிழராக இருந்தால், அவர் சில விடயங்களை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவர முடியாது.

உதாரணத்திற்கு மண்டைதீவில படையினருக்காக, தனியாருக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரிப்பதற்கு நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் சென்றதையும் அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அதிகாரிகள் திருப்பிச் சென்றதையும் வடக்கு ஆளுநர் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வருவதென்பது ஒரு போதும் சாத்தியமாகாது.

அதால தான் சொல்லுறன் தமிழர் தாயகத்தில் நடக்கிற அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் மற்றும் படையினரின் கட்டுப்பாட்டில இருந்து இன்னமும் விடுவிக்கப்படாத காணிகள், பொது மக்களின் பாவனைக்காகத் திறந்து விடாமல் படையினர் தடுத்து வைத்துள்ள வீதிகள் பற்றிய விபரங்களை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வர வேணும்.

அப்படி ஜனாதிபதி அநுரவின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் உண்மைத் தன்மைகளை ஜனாதிபதி அநுர அறிந்து கொள்வதற்கும் அதற்குரிய தீர்வை எடுப்பதற்கும் உதவியாக இருக்கும்.

இவ்வாறு சிறாப்பர் கூற, அதனை ஆமோதித்த பண்டிதர் பரமலிங்கம், இந்தாப் பாருங்க வசாவிளான் வீதி திறக்கப்பட்டதும் அந்த வீதி தங்களாலதான் திறக்கப்பட்டது போல பலரும் உரிமை கோருகினம்.

இப்படித் தான் எங்கட தமிழ் அரசியலின்ர திறம் இருக்குது.

எனவே சிறாப்பர் சொன்னது போல பிரச்சினைகளை ஜனாதிபதி அநுரவுக்குத் தெரியப்படுத்துறதுக்கான ஒரு கட்டமைப்பு இருப்பது அவசியம் தான்.

**கங்காணி:-** தனித்து படையினரின் பிரச்சினைகள் மட்டுமல்ல, எங்கட பகுதிகளில இருக்கக் கூடிய அரச நிர்வாகம் தவறிழைத்தால், அதையும் ஜனாதிபதியின்ர கவனத்திற்குக் கொண்டு வரக்கூடியதாக இருக்க வேணும்.

**விதானையார்:-** உண்மை தான். இப்பயெல்லாம் அரச அலுவலகங்களுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தால் உரிய பதில் கிடைப்பதில்லை எண்டு பொது மக்கள் கவலையடைகினம்.

அதிலும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு தொலைபேசி அழைப்பை எடுத்து, புகையிரதம் வெளிக்கிடும் நேரத்தைக் கேட்டால் அதற்கு வேண்டா வெறுப்பாகப் பதில் அளிப்பதாகவும் அந்தப் பதிலின் மூலம் தகவலை அறியமுடியாமல் இருப்பதாகவும் சிலர் கவலைப் பட்டினம். ஆகையால இது விடயங்களில சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேணும்.

இவ்வாறு விதானையார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றை திரிபுபடுத்தும் துரோகிகளிடம் விழிப்பாய் இருங்கள்-சிறீதரன்



(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழர்களின் வரலாற்றை மாற்றும் முயற்சியில் இனத் துரோகிகள் சிலர் ஈடுபட்டு வருகிறார்கள். அத்தகையவர்களின் கருத்துத் திணிப்புகள் தொடர்பில் இளைய தலைமுறையினர் அவதானமாக இருக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - வட்டக்கச்சி வட்டாரத்தில் நேற்று முன்தினம் ஒழுங்கமைக்கப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

எமது இனத்தின் இருப்புக்கான அடிப்படைக் கட்டமைப்புகள் அத்தனையையும் நீண்டகால நோக்கோடும், நிபுணத்துவ ஆற்றலோடும் நிறுவிய தமிழீழ விடுதலைப் புலிகளின் சிந்தனையிலும் செயல் நோக்கிலும் உருவாக்கம் பெற்றது தான், அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம்.

ஆனால், அதன் உருவாக்கத்தில் ஒரு துரும்பைத்தானும் அசைத்திராத, வடக்கிலுள்ள முன்னாள் அமைச்சர் ஒருவர், அத்தகைய வரலாற்றுப் பெரும்பணிக்கு தற்போது உரிமை கோரி வருகிறார். எங்களது வரலாறுகளை மறைத்தும் திரித்தும் வரும் இத்தகைய இனத்துரோகிகள் தொடர்பில் எமது மக்களும், இளைய தலைமுறையினரும் விழிப்பாய் இருக்க வேண்டும் என்றார். (நி-6-8)

# மரண அறிவித்தல்



தோற்றம்
20 - 08 - 1946

மறைவு
30 - 10 - 2024

## சின்னத்தம்பி சின்னத்துரை
## (ஐயாத்தம்பி)

மந்துவில் வடக்கு கொடிகாமத்தினை பிறப்பிடமாகவும் கொயிலாமனை கொடிகாமத்தினை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை (ஐயாத்தம்பி) கடந்த 30.10.2014 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சின்னத்தம்பி-பகீரதி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், கதிர்காமநாதன் (ஆசிரியர், இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்), கோகுலநாதன் (கனடா), கோகுலமதி(ஜேர்மனி), கோகுலவதனி, கோகுலவேணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகேஸ்வரி, (ஆசிரியர், யா/குடமியன் அ.த.க பாடசாலை), வனஜா (கனடா), குபேந்திரன் (ஜேர்மனி), சிவறதீஸ் (அதிபர், மயிலிட்டி ஞானோதயா வித்தியாலயம்), கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரிகா, கனுசிகன், யஸ்மிகா, யஸ்னுத், யதுமிகன், கிருஸ்டிகன், மதுக்ஷா, அபிசாயினி, சங்கீத் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், கந்தையா, சுப்பிரமணியம் மற்றும் அன்னப்பிள்ளை, கனகம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.11.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible]
077 [illegible]

கொயிலாமனை,
கொடிகாமம். (c-1507 )

# தமிழர்களின் வாழ்வியலை சிதைத்தவர்களை வீட்டுக்கு அனுப்புங்கள்-மணிவண்ணன்

(கொழும்பு)



தமிழ் தேசிய கூட்டமைப்பை தலைவர் உருவாக்கினார். இன்று தேர்தல் களத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இல்லாமல் போய்விட்டது. இது தான் தமிழ் தேசியம் பேசி அரசியல் செய்தவர்களின் சாதனை என யாழ் . தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்

மேலும் தெரிவிக்கையில், யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் அரசியல்வாதிகளால் தமிழ் மக்களுக்கு கிடைத்த மாற்றம் என்ன என ஒவ்வொருவரும் தேர்தலில் வாக்களிக்கும் போது இதனை நிச்சயமாக உங்களிடம் நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்

கடந்த 15 வருடங்களாக தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் என்னத்தை செய்தார்கள்?

தமிழ் தேசிய கூட்டமைப்பை தலைவர் உருவாக்கினார். இன்று தேர்தல் களத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இல்லாமல் போய்விட்டது. இதுவா தமிழ் தேசியம் பேசும் அரசியல் வாதிகளின் சாதனை.

தமிழ் தேசியம் பேசி சமஸ்டியை பெற்று விடவில்லை. ஆக குறைந்தது மாகாண சபை காலம் முடிந்தவுடன் அடுத்த மாகாண சபை தேர்தலை நடாத்த கூட இந்த அரசியல்வாதிகளால் முடியாமல் போயுள்ளது.

இதுவரையில் ஒன்றையும் சாதிக்காதவர்கள், மீண்டும் உங்கள் முன் வந்து இன்னும் ஐந்து வருடங்கள் தாருங்கள் என நிற்கின்றார்கள் நாங்கள் இன்னுமொரு ஐந்து வருடங்களுக்கு ஆணை கொடுத்தால், தமது கட்சி பிரச்சினையை நீதிமன்றில் தீர்க்கவே அவர்களுக்கு காலம் போதும் தமிழ் மக்களுக்கு எதுவும் பெற்று தர மாட்டார்கள் மற்றைய தரப்பு பொருளாதாரத்தை கட்டி எழுப்புகிறோம், வேலை வாய்ப்புக்களை பெற்று தருகிறோம் என்கிறார்கள். வடக்கில் நான்கு மாவட்டங்கள் வறுமை கோட்டின் கீழ் உள்ளது. இளைஞர்கள் யுவதிகள் வேலை வாய்ப்புகளை தேடி வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். ஆகவே இருவருமே எதனையும் சாதிக்கவில்லை.

தமிழ் மக்கள் கூட்டணியை தவிர ஏனைய கட்சிகளில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றில் இருந்தும் தமிழ் மக்களின் அரசியல் உரிமையும் வெல்லவில்லை பொருளாதாரத்தையும் கட்டி எழுப்பவில்லை. இந்த தரப்புக்களுக்கு தான் மீண்டும் மீண்டும் வாக்களிக்க போகின்றீர்களா?

எங்கள் வரலாறுகளை அடுத்த சந்ததிகளுக்கு கடத்திக்கொண்டு , எங்கள் மரபு சின்னங்களை மீட்டெடுத்து அதற்கு உயிர் கொடுத்துக் கொண்டு யாழ்ப்பாண மாநகரை மேம்படுத்திய ஒரே தரப்பு நாங்கள் தான் அதற்காக எங்களை பயங்கரவாதிகள் என கைது செய்தார்கள்.

தென்னிலங்கை மக்கள் பெரும் அரசியல் மாற்றத்தை செய்துள்ளார்கள். காலாகாலமாக அவர்களை ஏமாற்றி வந்த அரசியல் தரப்புக்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

அத போல தமிழ் மக்களின் அரசியல் வாழ்வியலை சிதைத்தவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

இந்த அரசியல் மாற்றத்தை நீங்கள் செய்வீர்கள் என நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8-33)

# யாழைப் போன்று கிளிநொச்சியையும் அபிவிருத்தி செய்வேன்-அங்கஜன்

(சாவகச்சேரி)



எனக்கு வாக்களித்த யாழ்.மாவட்ட மக்களுக்கு வேண்டிய அபிவிருத்திகளை நான் செய்து விட்டேன். அது போல நீங்கள் வாக்களித்தவர்கள் உங்களுக்கு என்ன செய்தனர் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் கிளிநொச்சி மாவட்ட மக்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் 50 ஆயிரம் வாக்குகளைப் பெற்றேன். அதில் 98 சதவீத வாக்குகளை யாழ்ப்பாண மாவட்ட மக்களே வழங்கியிருந்தனர்.

இம்முறை தேர்தலில் கிளிநொச்சி மக்களும் எனக்கு ஆதரவைத் தந்தால் யாழ்ப்பாணத்தில் செய்த அபிவிருத்திகளை கிளிநொச்சியிலும் செய்ய முடியும்.

கடந்த தேர்தலில் ஐம்பதாயிரம் வாக்குகளைப் பெற்ற நான் இம்முறை அதை விட அதிக வாக்குகளைப் பெற்று இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றி கிளிநொச்சியையும் அபிவிருத்தி செய்வேன் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (6-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கனவு யாழ்



## 2015-2019

**65,560+**
மொத்த திட்டங்கள்

**ரூ 1,984,308,000**
மொத்த நிதி ஒதுக்கீடு


**455,170+**
மொத்த பயனாளர்கள்

## 2020-2024

**20,268+**
மொத்த திட்டங்கள்

**ரூ 4,533,308,077**
மொத்த நிதி ஒதுக்கீடு

**444,416+**
மொத்த பயனாளர்கள்









# அங்கஜன்

## இராமநாதன்




ஜனநாயக தேசியக் கூட்டணி
ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය
Democratic National Alliance

என் கனவு யாழ்

- www.enkanavuyarl.lk
- info@enkanavuyarl.lk
- facebook.com/enkanavuyarl
- facebook.com/angajan1
- instagram.com/enkanavuyarl

### அங்கஜன் இராமநாதன்

இல 80 கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
+94 77 382 7568

மின்னஞ்சல் - angajan@gmail.com
வலைத்தளம் - https://enkanavuyarl.lk/



**கல்வித் தகைமைகள்** B.Eng (Hons), MBA (International)

### அரசியல் அனுபவங்கள்

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர்
மாகாணசபை உறுப்பினர்
பிரதி விவசாய அமைச்சர்
ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பிரதித் தலைவர்
யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர்
பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளர்

### பதவிகள்

பாராளுமன்ற உறுப்பினர்
விவசாய பிரதி அமைச்சர்
பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளர்
யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவர்

கடந்த தேர்தலில் மக்கள் அபிவிருத்திக்கான ஆணையை எமக்கு வழங்கியிருந்தனர். ஆணைப்படி, நாங்கள் சொல்வீரர்களாக இல்லாமல் செயல் வீரர்களாக கடந்த காலத்திலே மக்களுக்கு, அரசாங்க நிதியிலும் தனிப்பட்ட நிதியிலும் வாழ்வாதாரம், பொருளாதாரம், கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய சமூக மேம்பாடுகள் சார்ந்து பல்வேறு வேலைத்திட்டங்களை செய்திருக்கின்றோம். எம் தமிழ் மக்களை நன்கு புரிந்து கொண்டவர்கள் நாம். அவர்களின் விருப்பத்திற்கிணங்கவே தனித்துவமிகு கட்சியாக இம்முறை களமிறங்கியிருக்கின்றோம். என் கனவு யாழ் பயணம் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்திருக்கின்றது. அதுவோர் நீண்ட பயணம். அதனை தொடர்வதற்கான வாய்ப்பு இந்த தேர்தல். நாங்கள் சொன்னவற்றில் செய்ததை உங்களுக்கு தெரியும். இப்பயணத்தை தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான சாத்தியத்தை உங்கள் வாக்குகள் மூலம் எமக்கு வழங்குங்கள். எம் கனவுகளை நோக்கி நாம் சேர்ந்து பயணிப்போம்.

## MY DREAM ACADEMY

மீண்டும் கல்வியில் முதலிடம்



என் கனவு யாழ் - மீண்டும் கல்விக்கு முதலிடம் என்ற இலக்கின் ஒரு மைல் கல்லாக **MY DREAM ACADEMY** ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்பட்டுவருகிறது.



"தகவல் தொழில்நுட்ப கற்றலின் ஆரம்ப நிலையை இலவசமாக மாணவர்களுக்கு கொண்டு சேர்க்கிறது."

ஒவ்வொரு மாணவரும் **தலா 25 லட்சம்** பெறுமதியான கற்கையை முற்றிலும் இலவசமாக பெறுகின்றனர்.

இக்கற்கைநெறியானது, Code.org, Thunkable, Microbit, Pictoblo, Glitch உள்ளிட்ட தளங்களோடு இணைந்து உருவாக்கப்பட்ட தரம்வாய்ந்த 300க்கு மேற்பட்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் ஒவ்வொரு 8 பாடத்திட்டங்களையும் நிறைவு செய்யும்போது சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை பெற்றுக்கொள்வார்கள்.

"தேர்ச்சியடையும் மாணவர்கள் சர்வதேச மட்ட தொழில்வாய்ப்புகளை பெற தகுதியடைகிறார்கள்".

இந்த வாய்ப்பு மிகவும் பெறுமதியானது. உங்கள் கற்றலுக்கான முழுச் செலவையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதை சரியாக பயன்படுத்தி, திறம்படக்கற்று தேர்ச்சி பெறுங்கள். அதன் பலன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்குமே. இதை மனதில் நிறுத்தி, இக்கற்கைநெறியை மகிழ்ச்சியுடன் தொடங்குங்கள். தொழில்நுட்ப உலகத்துக்குள் வரவேற்கிறேன்.



## GOAL OF MY DREAM ACADEMY

"எமது மாணவர்களின் கல்வித் தரத்தை அதிகரித்து முதலிடத்துக்கு அவர்களை கொண்டுவருதல்."

# X 1 செயல் அறிக்கை - 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் பயணம்

- **2010** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிட்டு 3161 வாக்குகளை பெற்றேன்
- **2010** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டேன்
- **2013** — மாகாணசபை தேர்தலில் 10,034 வாக்குகள் பெற்று வடக்கு மாகாண சபைக்கு தெரிவானேன்
- **2015** — பாராளுமன்றத் தேர்தலில் 17,300 வாக்குகள் பெற்று தேசியப்பட்டியலூடாக தெரிவானேன்
- **2015** — யாழ் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு இணைத்தலைவராக நியமிக்கப்பட்டேன்
- **2015** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட தலைவராக நியமிக்கப்பட்டேன்
- **2018** — பிரதி விவசாய அமைச்சராக பொறுப்பேற்றேன். 140 நாட்கள் பிரதி அமைச்சராக கடமையாற்றினேன்
- **2018** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்
- **2018** — யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் விசேட திட்டங்களின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டேன்
- **2019** — யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்
- **2020** — பாராளுமன்றத் தேர்தலில் 36,365 வாக்குகள் பெற்று மாவட்டத்தின் அதிகூடிய விருப்பு வாக்கு பெற்ற உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு தெரிவானேன்
- **2020** — பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளராக நியமிக்கப்பட்டேன். இளவயதில் அப்பதவியை பெற்றுக்கொண்ட உறுப்பினராக விளங்கினேன்
- **2020** — யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்
- **2024** — ஜனநாயக தேசிய கூட்டணியின் பிரதித்தலைவராக நியமிக்கப்பட்டேன்



## 01.அடிப்படை வசதிநலன்

நிறைவான கிராமம்
**271,195** பயனாளிகள்
793 திட்டங்கள்
ரூ 864,787,864 ஒதுக்கீடு

மலசல கூடம்
**914** பயனாளிகள்
ரூ 65,500,000 ஒதுக்கீடு

மூளாய் கிராமத்துக்கு
**4 மில்லியன்**
ரூபாய் பெறுமதியில் நனோ தொழில்நுட்பத்துடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

வீட்டுத்திட்டம்
**3484** வீடுகள்
ரூ 2,733,600,000 ஒதுக்கீடு

## 2. உட்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு நலன்

வீதி புனரமைப்பு
180 திட்டங்கள்
**321+ KM**

விளையாட்டு கழகங்களுக்கான விசேட உதவித்திட்டம் 2023
பயனாளிகள் **10,000**

விளையாட்டு மைதானம்
**30** திட்டங்கள்
ரூ 88,500,000 ஒதுக்கீடு

ஆலய புனரமைப்பு
**60** திட்டங்கள்
ரூ 6,000,000 ஒதுக்கீடு

## 03.விவசாயம் மற்றும் உற்பத்தி

வர்த்தக பயிர் விதைகள்
**1110** பயனாளிகள்
ரூ 3,979,680 ஒதுக்கீடு

2 விவசாய களஞ்சியம்
ரூ 13,474,000 ஒதுக்கீடு

16 உற்பத்தி கிராமங்கள்
**1,292** பயனாளிகள்
ரூ 100,000,000 ஒதுக்கீடு

விவசாய குளங்கள் புனரமைப்பு
**10** திட்டங்கள்
ரூ 38,700,000 ஒதுக்கீடு

வீட்டுத்தோட்ட வாழ்வாதாரம்
(நாற்றுமேடை, வீட்டுத்தோட்டம், தேனைப்பனை)
**1185** பயனாளிகள்

Spray pump
**85** பயனாளிகள்
ரூ 2,125,000 ஒதுக்கீடு



## 04.போருக்கு பின்னான மீள் குடியேற்றம் மற்றும் இழப்பீடுகள்

யுத்தத்தால் ஏற்பட்ட சொத்திழப்பு கொடுப்பனவு
**253** பயனாளிகள்
ரூ 3,488,7?? ஒதுக்கீடு

இலவச மின்சார இணைப்பு
**2005** வீடுகள்
ரூ 45,000,000 ஒதுக்கீடு

நீண்டகாலமாக எமது மக்கள் எதிர்கொண்டிருந்த சட்ட ஆவணங்கள், பதிவுகள், இழப்பீடுகள் தொடர்பாக தீர்வுகளை பெற்றுக் கொள்ள கூடியவகையில் "நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவையை நீதி அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்தமை.

வடக்கில் போரினால் அங்கங்களை இழந்த மற்றும் இதர காரணங்களால் அங்கங்களை இழந்த வறுமைப்பட்ட மக்களை கருத்திற்கொண்டு ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாமை யாழ் மாவட்டத்தில் நடாத்தியமை.

## 05.பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி
**1500** பயனாளிகள்

கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு
**424** பயனாளிகள்

GLOCAL Fair
நடமாடும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்

வடமாகாண தொழில்துறை நிலையத்தின் சாயம் நிலையத்தை மேம்படுத்தல்
**150** பயனாளிகள்

பற்றிக் பயிற்சி நிலையம்
**500** பயனாளிகள்
ரூ 93,750,000 ஒதுக்கீடு

வாழ்வாதார திட்டங்கள்
**7289** பயனாளிகள்

## 06.நிதி மற்றும் ஏனைய வளர்ச்சித்திட்டங்கள்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்
**35000** பயனாளிகள்
**347** திட்டங்கள்
2018-2019 ரூ 20,000,000 ஒதுக்கீடு
2021 ரூ 10,000,000 ஒதுக்கீடு

150 மில்லியன் விசேட நிதி 2024
**35000** பயனாளிகள்

3 மில்லியன் வேலைத்திட்டம் 2022
**80000** பயனாளிகள்
ரூ 272,704,000 ஒதுக்கீடு

**2020 - 2024**

யாழ் இருப்பியல்

X 1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்-2025

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ் பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2024 டிசம்பர் 31ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.


1. பாவனைப்பொருட்கள் காகிதாதிகள்
   - 1.1 எழுதுபொருட்கள், காகிதாதிகள்.(Stationary,Calculator, Toner, Cartridge ,Printer Ribbon, Printer paper, etc...)
   - 1.2 வெட்டும் கருவிகள், மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
   - 1.3 சுகாதார சேவை வழங்கல்:- தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், கழிப்பறை சுத்தம் செய்யும் பொருட்கள், பாத்திரம் சுத்தம் செய்யும் பொருட்கள், சுத்திகரிப்பு மற்றும் மெது கூட்டல் பொருட்கள் முதலியன.
   - 1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுச்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.
2. புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.
   - 2.1 அச்சிடுதல், புளொக்செய்தல், றப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்.
   - 2.2 புத்தகங்கள், பருவ வெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்.
   - 2.3 புத்தகங்களையும், பருவ வெளியீடுகளையும் கோர்த்தல்.
3. தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்.
   - 3.1 அலுவலக தளபாடம் - மரம், உருக்கு-கணினி மேசை, கதிரைகள்.
   - 3.2 அலுவலக உபகரணங்கள் (பிரதிபண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள்,தொலைநகல் கருவிகள் முதலியன).
   - 3.3 தீயணைப்புசாதனங்களும், பாதுகாப்பு சாதனங்கள்.
4. கட்டிட பொருட்கள்/ பராமரிப்பு பொருட்கள் மற்றும் கருவிகள்
   - 4.1 சகல வகையான கட்டிட நிர்மாண பொருட்கள்.
   - a. சகல வகை தீந்தைகளும், தூரிகைகளும், கலப்பான் வகைகளும் அது தொடர்பான ஏனைய பொருட்களும்.
   - b. சீமெந்து வகைகள், மாபிள் ஒட்டும் சீமெந்து வகைகள், நீர் கசிவு சீமெந்து வகைகள்.
   - c. கட்டிட நிர்மாண வேலைகளுக்கான மணல், சல்லிகள், கற்கள் மற்றும் கிரவல் வகைகள்.
   - d. இரும்பு கம்பிகள், கல்வனைஸ் பைப்புகள் மற்றும் ஆணிகள்.
   - e. இரும்பு மற்றும் பித்தளையிலான கட்டிட பொருத்துக்களும் பிணைப்புக்களும் பூட்டு வகைகளும். (பிணைச்சல், திறாங்கு, Screw ஆணிகள் போன்றவை)
   - f. UPVC/CPVC யிலான பைப்பு வகைகளும் அவற்றிற்கான பொருத்துக்களும்.
   - g. தீராந்தி வகைகள், சலாகை வகைகள் மற்றும் பலகை வகைகளும்.
   - h. அனைத்து அலுமினிய சட்டங்கள் மற்றும் பொருத்துகள், கண்ணாடிகள், ஒட்டுப்பலகைகள்.
   - i. குளியலறை மற்றும் கழிப்பறைகளுக்கான மாபிள் பொருத்துகள், சுவர் மற்றும் தரைகளுக்கான மாபிள்கள்.
   - j. கழிவுநீர் சீராக்கி தொகுதி பராமரிப்பு பொருட்கள்.
   - k. குழநீர் சீராக்கி தொகுதி பராமரிப்பு பொருட்கள்.
   - l. நீர் கசிவு தடுப்பு மற்றும் துருப்பிடித்தல் தடுப்பு இரசாயன பொருட்கள்.
5. மின்னியல் பொருட்கள்
   - 5.1 மின்சாதன பொருட்கள், உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்கள்.
6. ஆய்வு கூட பொருட்கள்/சாதனங்கள்.
   - 6.1 ஆய்வுகூட சாதனங்கள்
   - 6.2 ஆய்வுகூட இரசயனபொருட்களும் கண்ணாடிச் சாதனங்கள்.
7. வாகன பராமரிப்பு
   - 7.1 டயர், ரியுப்புகள், பற்றிகள்.
   - 7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
   - 7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
   - 7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.
8. பொதுச்சேவைகள் வழங்கல்கள்
   - 8.1 ஆயுள் வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
   - 8.2 விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்.
   - 8.3 புடவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
   - 8.4 தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயன கருவிகள், இயற்கை உரம், பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.
   - 8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணனி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்,மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
   - 8.6 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
   - 8.7 கதிரைகள் பின்னுதல்.
   - 8.8 உடைகள், கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
   - 8.9 உடைகளைச்சலவை செய்தல்.
   - 8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.
   - 8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.
   - 8.12 பொதிகள் பரிமாற்று / சுங்க தீர்வைகள் சேவை.
   - 8.13 நிகழ்வுகள் நிர்வகிப்பு சேவை.
   - 8.14 உணவு வழங்கல் சேவை.
   - 8.15 வீடியோ மற்றும் புகைப்பட சேவை.
   - 8.16 வாடகை அடிப்படையில் ஒலி மற்றும் ஒளி உபகரணங்கள் வழங்கல்.
   - 8.17 பயண முகவர் சேவை.
   - 8.18 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C,passenger bus, lorry, tractors with trailer, etc.
   - 8.19 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)
9. எந்திரவியல் சேவைகள்.
   - 9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் செய்தலும்.
   - 9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள் திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட.
   - 9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
   - 9.4 குளிரூட்டி வாகன குளிரூட்டி திருத்துதல்.
   - 9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டடங்கள், வீதிகள், ஏனைய நிர்மாணங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்.
   - 9.6 மின்சார இணைப்பு வேலைகள்.
   - 9.7 நீர் விநியோக தொகுதி, வடிகாலமைப்பு தொகுதி, கழிவுநீர் சீராக்கி தொகுதி மற்றும் குழநீர் சீராக்கி தொகுதி வேலைகளும், பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளும்.
   - 9.8 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
   - 9.9 கட்டிடங்கள்/கட்டிடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணை சேவைகள்.
   - 9.10 மின்சார உசாத்துணை சேவைகள்.
   - 9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் /பொருத்துதல் / தச்சுவேலை.
   - 9.12 ஏந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
   - 9.13 கறையான் /பீடைகள் ஒழிப்புவேலைகள்.
   - 9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா மற்றும் காவலாளிகள்)
   - 9.15 பராமரிப்பு வேலைக்கான கணியஅளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தல்.
   - 9.16 தீயணைப்பு இயந்திர தொகுதி பராமரித்தலும் திருத்த வேலைகள்.
10. மின்னணு பொருட்கள்.
    - 10.1 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.
    - 10.2 தகவல் தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருட்களிற்கான வழங்கலும் சேவைகளும் பராமரிப்புகளும்.
    - 10.3 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
    - 10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்கத்தொலைபேசிகளும் வழங்கல்.
    - 10.5 கனனிவலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

### பதிவு தொடர்பான நிபந்தனைகள்

1. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2025"எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   - பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் வைப்பு சிட்டை பிரதி என்பவற்றினை நிதியாளர்,யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிடல் வேண்டும்.
2. ஒவ்வொரு வழங்கல் /சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல.850000390000926 மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட்டின் பிரதியை இணைக்கவும்.
3. கம்பனி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் தங்கள் வியாபாரப் பதிவு பத்திரத்தில் குறிப்பிட்ட வியாபாரத்தின்பொது தன்மைக்கு ஏற்ற வழங்கல்/ சேவைக்கு மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும்.வியாபாரத்தின் பொதுத்தன்மையுடன் தொடர்பற்ற வழங்கல் / சேவைக்கு பதிவினை மேற்கொள்ளும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
4. 2025ஆம் ஆண்டிற்கான சகல விலைமனுக்களும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும்.ஆயினும் பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு அதிகாரம் உண்டு.
5. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள்/சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத் திலிருந்து நீக்கப்படும்.
6. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர்,கட்டிடக் கலைஞர் ஆகியோ ரின் பெயர் அனுப வங்களையும் CIDA பதிவு இலக்கம் மற்றும் தரம் ஆகியவற் றையும் குறிப்பிடுக. (எந்திரவியல் சேவை கள் இலக்கம் 9.5, 9.6, 9.7, 9.8, 9.9, 9.10 மற்றும் 9.16 இற்கு மட்டும்)
7. சேவைகள் /வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கல்-II) இனைத் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.இல. 021 222 6519.

குறிப்பு
ஒவ்வொரு வழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. 850000390000926 மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட்டின் பிரதியை இணைக்கவும்.


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
வழங்குனர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2025

01. தனிப்பட்டதகவல்கள்
- 1.1 முழுப்பெயர் :........................
- 1.2 தே.அ.அ. இல :........................ (தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)
- 1.3 விலாசம்:........................
- 1.4 நிரந்தர தொலைபேசி இல:..........கைத்தொலைபேசி இல:..........தொலைநகல்:.........
- 1.5 மின்னஞ்சல் முகவரி ........................

02. வியாபாரதகவல்கள்
- 2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:........................
- 2.2 வியாபார பதிவு இல:........................ (வியாபார பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)
- 2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:........................ (VAT இலக்கம் காணப்படின், பெறுமதிசேர் வரி (VAT) பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும், CIDA பதிவு இலக்கம்......... தரம் ..............., காலாவதி திகதி .........
- 2.4 விலாசம்:........................
- 2.5 நிரந்தர தொலைபேசி இல:........................கைத்தொலைபேசி இல:........................ தொலைநகல் :........................ (குறைந்த பட்சம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்)
- 2.6 மின்னஞ்சல் முகவரி:........................
- 2.7 மாவட்டம்:........................
- 2.8 பிரதேசசெயலர் பிரிவு:........................

03. மேலதிகவிபரங்கள்
- 3.1 வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் :........................
- 3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :........................
- 3.3 ICTADபதிவு இல :........................ (எந்திரவியல் சேவை 9.5 9.9 இற்குமட்டும்.) ICTADபதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000.00 (இருநூறாயிரம் மட்டும்) க்குஉட்பட்ட வேலைகளுக்கான கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவார்.

04. வழங்கல் சேவைகளுக்கான விபரங்கள்.

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |

05. வழங்கப்படும் பொருட்கள் வழங்குனராலேயே பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்

நான்/நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/ இணங்குகின்றோம்.

கையொப்பம் :........................
பெயர் :........................ திகதி :........................

**பதிவாளர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


(சி-1504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவசிவ

# சிவப்பேறு குறித்த செய்தி



சிவபூமியில்
02.06.1941

சிவபுரத்தில்
01.11.2024

# சிவத்திரு. நடராஜா மகாதேவன்

திருச்சிற்றம்பலம்

போற்றி! ஓம் நமச்சிவாய! புயங்கனே, மயங்குகின்றேன்;
போற்றி! ஓம் நமச்சிவாய! புகல் இடம் பிறிது ஒன்று இல்லை;
போற்றி ஓம் நமச்சிவாய! புறம் எனைப் போக்கல், கண்டாய்;
போற்றி ஓம் நமச்சிவாய! சய! சய! போற்றி! போற்றி!

-காருண்யத்து இரங்கல்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை,
பத்தி நெறி அறிவித்து, பழ வினைகள் பாறும்வண்ணம்,
சித்த மலம் அறுவித்து, சிவம் ஆக்கி, எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்? அச்சாவே!

-அச்சோப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

யாழ்ப்பாணம் அத்தியடியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கு, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவத்திரு.நடராஜா மகாதேவன் அவர்கள் 01.11.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவப்பரம்பொருளின் பாதங்களைச் சென்றடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நடராஜா, நடராஜா இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சீனித்தம்பி, சீனித்தம்பி சிவபுரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மகிந்தன், தர்ஷன், சுஜீர்த்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தக்ஷயாணி, சுகன்னியா, சதீஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளை அடைந்து மீண்டும் பிறப்பில்லா பேரின்பப் பெருவாழ்வினை பெற்றிட வேண்டி எல்லாம் வல்ல தென்னாடுடைய சிவனிடம் விண்ணப்பம் வைக்கின்றோம்.

(சு-1506)

இங்ஙனம்

சிவத்திரு.சுப்பிரமணியம் சுபதாசன் மற்றும் திருமதி சித்திரா சுபதாசன் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

423

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# மருத்துவம் சம்பந்தமான சில அடிப்படை உரிமைகள்

**வை**த்தியசாலைகளில் தாம் அவமதிப்புகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாவதாகக் கருதி வைத்தியசாலைகளுக்குச் செல்லாது ஆபத்துக்களை தேடிக்கொள்பவர்கள் எத்தனை பேர்? வைத்தியருக்கு சொல்லும் தனது நோய் நிலை சம்பந்தமான இரகசியத்தன்மை பேணப்படுமா? என்ற சந்தேகத்தில் இக்கட்டான சில உண்மைகளை மறைப்பதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பெரும் தாக்கங்கள் எத்தனை? இரகசியம் பேணப்படவேண்டிய மருத்துவத் தகவல்களைப் பத்திரிகையில் பிரசுரித்து அம்பலப்படுத்தப்படுவதால் ஏற்படும் அவமானத்தால் நிகழ்ந்து வரும் சுகாதாரத் தாக்கங்கள் எத்தனை? தராதரம் குறைந்த மருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படுவதால் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் எத்தனை?

நோயுற்ற ஒருவரின் நோய் சம்பந்தமான தகவல்கள் அனைத்தும் உணர்வபூர்வமானவை. அது சாதாரண நோயாக இருந்தாலும், கடுமையான நோயாக இருந்தாலும் அல்லது அது அவரின் அந்தரங்கங்கள் சம்பந்தப்பட்ட நோயாக இருந்தாலும் அந்த நோய் சம்பந்தமான தவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டியது மருத்துவக் குழுவின் கடமையாகும்.

18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் தமது சுகாதார நிலை சம்பந்தமான தகவல்களை வேறு எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் உரிமை இருக்கின்றது. சம்பந்தப்பட்டவரின் அனுமதி இன்றி அவரின் நெருங்கிய உறவுகளான பெற்றோருக்கோ, கணவன், மனைவிக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ கூட அவரின் மருத்துவ தகவல்களைத் தெரிவிக்கும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.

ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவரின் உற்றார், உறவினர், நண்பர்கள், எதிரிகள், விடுப்புவிசாரிப்போர் போன்ற பலதரப்பட்டவர்களும் கூட்டமாகவும் தனித்தனியாகவும் நேரடியாகவும் தொலைபேசிமூலமாகவும் மருத்துவக்குழுவிடம் நோயுற்றவரின் நோய்நிலை சம்பந்தமாக வினவுவது ஒரு சாதாரண நிகழ்வாக இருந்து வருகின்றது. அத்துடன் நிவாரணம் பெறுவதற்கும் குடும்ப உறுப்பினர்கள் விசா பெறுவதற்கும், குடும்பத்தவரின் தொழில், இடமாற்றம் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கும் நோயுற்றவரின் இரகசியமான மருத்துவத் தகவல்களை கடிதம் மூலம் எழுதித்தருமாறு கேட்டு வைத்தியரிடம் படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

சிலசமயம் பத்திரிகைகள் கூட நோயுற்றவர்களின் அந்தரங்கங்கள் அம்பலப்படுத்துவதற்கு காரணமாக அமைகின்றன. உதாரணமாக "AIDS நோயாளி வைத்திய சாலையில் அனுமதி", "பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட சிறுமிக்கு சிகிச்சை", "சட்டவிரோத கருகலைப்பு பெண் ஆபத்தான நிலையில் அனுமதி" போன்ற செய்திகள் சர்வசாதரணமாகி வருகின்றது.

தமது நோய்நிலை அம்பலப்படுத்தப்பட்டுவிடும் என்று அஞ்சி பலர் தமது நோய் நிலையின் உண்மையான வடிவத்தை மருத்துவரிடம் வெளிப்படுத்த தயங்குகின்றனர். இதனால் பல பாரதூரமான விளைவுகளும் ஏன் இறப்புகளும் கூட ஏற்பட்டுவருகின்றன.

மருத்துவக்குழ நோயுற்றவர்களுக்கு சொல்வது ஆலோசனைகளே தவிர கட்டளைகள் அல்ல. அது அவரது மருந்துகள் சம்பந்தமாக இருந்தாலும் சத்திர சிகிச்சைகள் சம்பந்தமாக இருந்தாலும் மருத்துவக் குழுவின் ஆலோசனைகளைக் கேட்டு இறுதித்தீர்மானம் எடுக்கும் உரிமை நோயுற்றவர்களுக்கே இருக்கின்றது. அந்த ஆலோசனைகள் கடைப்பிடிக்கப்படா விட்டால் கூட கோபித்துக்கொள்ளும் உரிமை மருத்துவக்குழுவுக்கு இல்லை. உதாரணமாக, ஒருவர் கொடுக்கப்பட்ட மருந்துகளை ஒழுங்காக பாவிக்காது உடற்பயிற்சியோ, உணவுக் கட்டுப்பாடோ எதுவும் செய்யாது உடல் பருத்து புகைக்கும் தன் பழக்கத்தையும் தொடர்ந்து கொண்டு குடிபோதையில் மருத்துவரைச் சந்திக்கப்போனால் கூட அவரைக் கோபித்துக்கொள்ளும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.

நோயுற்றவருடன் கலந்துரையாடாமல் அவரின் உண்மையான விருப்பு, வெறுப்புக்கள் கேட்கப்படாமல் குடும்ப உறுப்பினர்களின் தீர்மானத்தின் பேரில் அவர் மீது பல சிகிச்சை முறைகளும் மற்றைய கவனிப்பு முறைகளும் திணிக்கப்படும் நிலை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுவிடுகிறது.

ஒருவன் நோய்வாய்ப்பட்டுவிட்டான் என்பதற்காக அவனிற்கு இருக்கும் அடிப்படை மனித உரிமைகளை மீறிச் செயற்படுவது மனிதத்துவம் ஆகாது. அந்தவகையிலே நோயுற்றவர் தனது சொந்த விருப்பப்படி நடந்துகொள்ளும் உரிமையும் மதிக்கப்படவேண்டும்.

தனது நோய் நிலை சம்பந்தமான முழு விபரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் உரிமை, அதற்கு செய்யக் கூடிய வைத்திய முறைகளால் ஏற்படக் கூடிய நன்மை, தீமைகள் பற்றி அறிந்து கொள்ளும் உரிமை, ஒவ்வொரு சோதனைகளும் எதற்காகச் செய்யப்படுகின்றன என்று கேட்டு தெரிந்து கொள்ளும் உரிமை உடற்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு நடத்தை மாற்றங்கள் போன்றவற்றால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள், பிரதி கூலங்கள் எவை என்பதை அறிந்து கொள்ளும் உரிமை போன்ற உரிமைகளை நோயுற்ற ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதனை சரியான முறையில் பயன்படுத்திக்கொண்டால் மட்டுமே அவரினால் தனது சிகிச்சைமுறைகள் சம்பந்தமான தீர்மானத்தை சரியான முறையில் எடுக்கமுடியும்.

நோயுற்ற ஒருவர் மருந்தை பாவிக்காமல் இருப்பதற்கு விருப்பப்படலாம், சத்திரசிகிச்சை செய்யாமல் இருக்க விரும்பலாம், தொடர்ந்து புகைப்பிடிப்பதற்கு விருப்பப்படலாம், உடலில் வலியை ஏற்படுத்தக்கூடிய சோதனைகளை செய்யாமல் விடுவோம் என்று நினைக்கலாம், தொடர்ந்து குடிவகைகள் பாவிக்க ஆசைப்படலாம், வேறோரு மருத்துவரின் இரண்டாவது அபிப்பிராயத்தை கேட்க விரும்பலாம், கோயிலுக்குச் சென்று சில சமயப்பெரியவர்களின் ஆசியும் அறிவுரையும் பெற்றுவர விருப்பப்படலாம், வேறு ஒரு மருத்துவ முறைக்கு மாறுவதற்கு விருப்பப்படலாம், சொந்த விருப்பத்தின் பெயரில் வைத்தியசாலையிலிருந்து வீடு செல்ல நினைக்கலாம், உணவுக்கட்டுப்பாட்டை தவிர்த்துக்கொள்ள விருப்பப்படலாம். இது போன்ற பல விருப்பங்கள் நோய்வாய்பட்ட ஒருவருக்கு இருக்க முடியும். மருத்துவத்துறையிலே ஒருவர் வாழும் காலத்தை நீடிக்கவேண்டும் என்பது



எவ்வளவு முக்கியமோனதோ அதே அளவு முக்கியத்துவம் அவர் வாழும் காலத்திலே மகிழ்ச்சியாகவும் மன நிறைவாகவும் வாழவேண்டும், வாழ வைக்கவேண்டும் என்பதிலும் இருக்கின்றது. எனவே நோய்வாய்ப்பட்டவர்கள் தமது மனநிறைவுக்காக சுகாதாரம் சம்பந்தமான தமது சொந்த விருப்பங்களை மருத்துவக்குழுவிற்கு தயங்காமல் தெரியப்படுத்த முடியும்.

தமது உண்மையான நிலைப்பாட்டை அல்லது விருப்பங்களை மருத்துவக்குழுவிற்கு சொல்வதனால் அவர்களின் மருத்துவக் கவனிப்பில் பாதிப்பு ஏற்படும் என்று கருதிவிடமுடியாது. மருத்துவக்குழ நோய்வாய்ப்பட்டவருக்கு சில விடயங்களை தெளிவுபடுத்த இது உதவியாக இருக்கும். சரியான ஆலோசனைகளை நோயுற்றவர் கடைப்பிடிக்காதுவிட்டால் அவருக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்து விடுமோ என்ற மனிதாபிமான அடிப்படையிலே நோயுற்றவர்களைக் கண்டிக்கும் நிகழ்வு பல நடைபெற்ற வண்ணம்தான் இருக்கின்றன. கண்ணுக்கு முன்னால் ஒருவர் ஆபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் பொழுது அவரை தடுத்தும் கேட்காமல் அதே திசையில் அவர் சென்று கொண்டிருக்குமபொழுது அதனை அமைதியாக பார்த்துக்கொண்டிருப்பது யாருக்கும் மிகவும் கடினமானதாக இருக்கும். இந்த நிலையே பல சமயங்களில் மருத்துவனுக்கும் ஏற்படுகிறது. எது எவ்வாறாக இருப்பினும் நோயுற்றவருடன் கோபப்படுவது சரியான செயலாகாது

மருத்துவ ஆலோசனைக்கு எதிராக ஒருவர் வீடு செல்லும் சந்தர்ப்பங்களில் கூட நோய்நிரூபண அட்டையையும் வீட்டிலே பாவிப்பதற்கான மருந்துகளையும் தொடர்ந்து வைத்தியசாலைக்கு வரவேண்டிய திகதிகளையும் கேட்டு பெற்றுக் கொள்ளும் உரிமை நோயுற்றவருக்கு இருக்கின்றது. மனம் மாறி அல்லது நோய் கடுமையாகி மீண்டும் அவர் வைத்தியசாலைக்கு வந்து அனுமதி பெற விருப்பப்படின் எந்தவித மனச் சஞ்சலமும் இன்றி வைத்தியசாலைக்கு வந்து அனுமதிபெறும் உரிமை அவருக்கு இருக்கின்றது.

தொடர்ந்து மருந்தெடுக்க வேண்டிய தேவை உடையவர்கள் வைத்தியசாலை கிளினிக்கில் OPD ஊடாக தாமாகவே சென்று சேர்ந்து கொள்ளும் உரிமை இருக்கிறது. இதற்கு வேறு வைத்தியர்களின் சிபாரிசு கடிதங்களோ, அனுமதிக் கடிதங்களோ அவசியமில்லை.

நோயுற்றவர்களின் கவனிப்பு முறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. உயிருக்கும் உடலுக்கும் உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும் இடையேயான போராட்டமாகவே மருத்துச்சிகிச்சைமுறை அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு நோயுற்றவரும் குணப்பட்டுச் செல்லும் பொழுது அவரும் அவரது சுற்றமும் மட்டுமல்ல மருத்துவக் குழுவும் அவர்களுடன் சேர்ந்து மட்டற்ற மகிழ்ச்சி அடையும். ஒரு நோயாளிக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டால் அல்லது நோயுற்றவர் இறந்துவிட்டால் அவரது சுற்றத்துடன் சேர்ந்து மருத்துவக் குழுவின் உள் மனதும் துயரம் கொள்ளும். மருத்துவத் துறையில் மட்டுமல்ல எந்த துறையிலும் இருக்கும் குறை பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சட்டக்கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வுகளும் கூட்டு முயற்சியுமே முக்கியமாக அமைகின்றது

**Dr. சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் கசிவை தடுக்க வினாத்தாள் வங்கி உருவாக்கம்

## பரீட்சை திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)


பரீட்சை வினாத்தாள்களை முன்கூட்டியே கசிவதை தடுக்கும் வகையில் வினாத்தாள் வங்கியை நிறுவுவதற்கான புதிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டுக்குள் அதனை நிறுவ முடியும் என்றும், இதனால் வினாத்தாள்கள் முன்கூட்டியே கசிவதை தடுக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த புதிய வேலைத்திட்டத்தின் கீழ் பரீட்சை வினாத்தாள்களை தனிநபர்களின் கைகளுக்குச் செல்லாமல் கணனி மூலம் தயாரிக்கும் பணியை மேற்கொள்வதன் மூலம் பரீட்சை தாள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை போன்றவற்றை நடாத்துவதில், பரீட்சை வினாத்தாள்களை முன்கூட்டியே வெளியிடுவது கடந்த காலங்களில் பிரச்சினையாக இருந்தது.

அந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர தேவையான தொழில்நுட்பம் தற்போது உள்ளதாகவும், அந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வினாத்தாள் வங்கி உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)


4 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



மலர்வு 12.10.1947

உதிர்வு 18.11.2020

அமரர் இராஜரட்ணம் தயாநிதி

திதி : 03.11.2024 ஞாயிற்றுக்கிழமை

அப்பா உங்கள் அன்பு முகம்தனை
மீண்டும் காணமாட்டோமா என
தினம் தினம் ஏங்கித் தவிக்கின்றோம்!
காலன் உங்களைக் கவர்ந்து சென்று
ஆண்டுகள் நான்கு ஆகிவிட்டதை
ஏற்க முடியவில்லையப்பா!
நான்கு ஆண்டென்ன நான்காயிரம்
ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களில் நிலையாய்
இருக்கும் அப்பா!

கேணியடி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(C-1501)

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்


# இராசிபலன்

03.11.2024
ஐப்பசி 17, ஞாயிற்றுக்கிழமை
துதியை முன்னிரவு 9.22 மணிவரை

விசாகம் காலை 6.12 மணிவரை
சுபநேரம் -9.04-10.34 மணிவரை
இராகுகாலம் -4.34-6.04 மணிவரை

சந்திராஷ்டமம்: அச்சுவினி

வளவன்

**மேஷம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**துலாம்:** உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.

**சிம்மம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.

**விருச்சிகம்:** விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும், வழிபாடு குதூகலம் தரும், பயணத்தால் பலன் கிடைக்கும், போசன சுகமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னேற்றமுண்டு, தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வல்லவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**தனுசு:** திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அன்பால் சாதித்துக் காட்டும் நாள், பயணங்களால் பலனுண்டு.

எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அதற்கு பயிற்சி அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு 2 ஆம் ஆண்டு

# நினைவலைகள்



அமரர்.

## மாணிக்கம் சண்முகநாதன்

(புதிய உயர்கல்லூரி - நிர்வாக இயக்குநர்)

விண்ணில்-26.09.2020

திதி:- 12.10.2024



அமரர்.

## அருள்நங்கை சண்முகநாதன்

(விரிவுரையாளர் -இந்துநாகரீகம்)

விண்ணில்-27.10.2022

திதி:-03.11.2024

எம் அன்பு மிகு பெற்றோர்களே,
குடும்பத்தின் ஒளி விளக்குகளாய் மிளிர்ந்தீர்கள்!
பார்போற்ற இப் புவிதனிலே வாழ்ந்தீர்கள்!
அன்பாய் பண்பாய் எம்மை அரவணைத்து மகிழ்ந்தீர்கள்!
எம் வாழ்வுக்கு ஒளி கொடுத்த தெய்வங்களே
எம்மை பாதியிலே தவிக்கவிட்டுச் சென்றதேனோ!

ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவுகள் நீங்காது
உங்களுடன் வாழ்ந்த வாழ்வு பொன்னானவை- அம்மா
ஆயிரம் ஆயிரம் பட்டதாரிகளை உருவாக்கினீர்கள்
இந்து நாகரிகத்திற்கு ஒரு மைல்கல் நீங்கள்
புகழ் பல படைத்து, புகழ் உடம்பில் இன்று வாழ்கிறீர்கள்.

காலங்கள் மாறலாம் "அம்மா, அப்பா"
உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதை
விட்டு நீங்காது பசுமையுடன் இருக்கும்
உங்கள் இருவரது பிரிவும் எம்மையும் எம் உறவுகளையும்
வாட்டி வதைக்கின்றது- ஒரு முறையேனும்
உங்கள் முகம் காணத் தவிக்கின்றோம்- உங்கள்
ஆசை வார்த்தை கேட்க எண்ணுகின்றோம்
நீங்கள் அமைதியாக உறங்கும் இடம் நாடி வருகின்றோம்
உங்கள் வரவை எதிர்பார்த்து என்றும் காத்திருக்கின்றோம்.
அம்மா அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!

**"சண்முகநாதம்"**
**கட்டைப்பாலி லேன்,**
**ஆனைக்கோட்டை.**

**உங்கள் பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள்- சந்துதன்,சாத்வீகன்**
**மற்றும் நம் உறவுகள்.**

(க-1505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர், புகழுக்கு அடிமையாகாமல் ,பலனையும் எதிர்பாராது செய்வதே உண்மையான உதவி!
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்களிப்பது உங்கள் உரிமை அதை யாரும் புறந்தள்ளாதீர்கள்

நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறப் போகிறது.

தமிழர் தாயகமாகிய வடக்குக் கிழக்கில் அதிகளவானவர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

இதனால் யாருக்கு வாக்களிப்பதென்ற குழப்பம் பொதுமக்களிடம் இருக்கவே செய்கிறது.

இந்நிலையில் சூழ்நிலைகளுக்கேற்ப தீர்மானங்களை எடுக்க மக்கள் தலைப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, தேர்தல் பிரசாரத்தின் பொருட்டு வீடுகளுக்கு வருகின்ற வேட்பாளர்களுக்கு எங்கள் வாக்கு உங்களுக்குத்தான் எனக் கூறி நயத்தக்க நாகரிகமாக நடந்து கொள்கின்ற வாக்காளர்களும் உண்டு.

தவிர, இன்னோர் தரப்பு வேட்பாளர்களிடம் கேள்வி கேட்கின்றன.

இதுவரை காலமும் தமிழ் இனத்துக்காக நீங்கள் செய்தது என்ன? என்பதுதான் அந்தக் கேள்வி.

இங்கு உரிய பதிலை அளிக்க முடியாமல் வேட்பாளர்கள் திண்டாடுவதான தகவல்களும் உண்டு.

அதிலும் சில வேட்பாளர்கள் புத்தி சாதுரியமாகப் பதிலளிப்பதாக நினைத்து வாக்காளப் பெருமக்களுடன் முரண்பட்டுக் கொள்கின்ற சந்தர்ப்பங்களும் உளது.

எதுஎவ்வாறாயினும் தேர்தல் களத்தில் நிற்கும்போது பொதுமக்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கு வேட்பாளர்கள் பதிலளிப்பது கட்டாயமானதாகும்.

அதேநேரம், ஒரு காலத்தில் அரசியல் கட்சி ரீதியாக ஆதரவு வழங்கி வந்த நிலைமை இன்று இல்லாமல் போய்; யார் கேட்டாலும் உங்களுக்குத்தான் எங்கள் வாக்கு என்று கூறுகின்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

உண்மையில் இஃது மிகப்பெரும் துரதிர்ஷ்டமானது.

உரிமைக்காகப் போராடுகின்ற ஓர் இனம் இவ்விதம் கன்னை பிரிந்து நிற்பது ஏற்புடையதல்ல.

இருந்தும் அவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதெனில், அதற்குக் காரணம் தமிழ் அரசியல் தரப்புகள் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

என்ன செய்வது எப்படியாக இருந்த நம் ஈழத் தமிழினம் இன்று அரசியல் தலைமை இல்லாத இனமாக மாறியுள்ளது.

இங்குதான் ஒரு விடயத்தை நம் தமிழ் மக்கள் கவனித்தாக வேண்டும்.

அதாவது அரசியல் தரப்புகள் மீது கொண்ட வெறுப்பு மற்றும் வேட்பாளர்கள் மீது கொண்ட கோபம் காரணமாக இம்முறை வாக்களிப்பதில்லை என்ற முடிவை எந்தச் சந்தர்ப்பத்திலும் நம் தமிழ் மக்கள் எடுத்துக் விடக்கூடாது.

யார் தேர்தலில் போட்டியிட்டாலும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் ஆறு பேர் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அதிலும் அந்த ஆறு பேரும் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் இருந்துதான் தெரிவாகப் போகின்றனர்.

எனவே தேர்தலில் போட்டியிடுபவர்களில் தக்கார் என்று கணிக்கக்கூடியவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். அதற்காகவேனும் பொதுமக்கள் வாக்களிப்பதைப் புறந்தள்ளாமல் இருப்பது அவசியம்.

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று யாழில் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கலந்து கொள்ளாத நிலையில் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் உடல்நலக் குறைவு காரணமாக வரவில்லை எனக் கூறப்பட்டது. (ம-7,33)

## வார இறுதி நாட்களிலும் யாழ்ப்பாணம் - கொழும்பு இன்டர்சிற்றி ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறைக்கும் கொழும்புக் கோட்டைக்கும் இடையிலான குளிரூட்டப்பட்ட தொடருந்து சேவையை இயக்குவதற்கு தொடருந்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் இந்தக் குளிரூட்டப்பட்ட தொடருந்து இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடருந்துப் பிரதி பொது முகாமையாளர் என்.ஜே.இடிபோலகே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், காலை 5.30 மணிக்கு கொழும்பு கோட்டை நிலையத்திலிருந்து புறப்படும் தொடருந்து 11.38 மணிக்கு காங்கேசன்துறை நிலையத்தை வந்தடையும்.

அன்றைய தினம் மதியம் 12.30 மணிக்கு காங்கேசன்துறை நிலையத்திலிருந்து புறப்பட்டு இரவு 7.19 மணிக்கு கோட்டை நிலையத்தை அடையவுள்ளது.

பத்து முதல் வகுப்பு பெட்டிகளைக் கொண்ட இந்த நகரங்களுக்கு இடையேயான தொடருந்தில் ஒரு பயணத்திற்கான டிக்கெட் கட்டணம் 3,200 ரூபா என தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## வடமராட்சி கிழக்கில் மோ.சைக்கிள் திருட்டு

வடமராட்சிகிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் சம்பவ தினத்தில் மழை பெய்ததால் வீட்டின் அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உறங்கிக் கொண்டிருந்த வேளையே திருட்டு இடம்பெற்றுள்ளது.

குடும்பஸ்தரால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கமைய சம்பவ இடத்திற்கு வருகை தந்து அருகில் உள்ள CCTV கமராக்களை ஆய்வு செய்து மருதங்கேணிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## அறுகம்பே தாக்குதல் விவகாரம் மாலைதீவு பிரஜை உட்பட 6 பேர் கைது

(அம்பாறை)

அம்பாறை, அறுகம்பே பிரதேசத்தில் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்ட சம்பவம் தொடர்பில் மாலைதீவு பிரஜை உட்பட 6 பேர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாத புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து அறுகம்பே பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அண்மையில் தகவல் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வவுனியாவில் வீட்டு வளாகத்தில் முதலை

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் வளாகத்திற்குள் முதலை ஒன்று நேற்று வந்தமையால் பொதுமக்கள் அச்சமடைந்தனர்.

வவுனியாவில் பருவமழை ஆரம்பித்துள்ளதுடன், கடந்தசில நாட்களாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது.

இந்நிலையில் பூந்தோட்டம் பகுதியில் உள்ள காணி ஒன்றிற்குள் சுமார் நான்கு அடி நீளம் கொண்ட முதலை ஒன்று மாலை நேரம் உள்நுழைந்துள்ளது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியாப் பொலிஸார் குறித்த முதலையை அங்கிருந்து அகற்றியிருந்தனர். (ம-7,250)

## திருச்சி - இலங்கை இடையே கூடுதல் விமான சேவை

இந்தியாவின் திருச்சி - இலங்கை இடையே கூடுதல் விமான சேவையை ஶ்ரீலங்கன் விமான நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

திருச்சி சர்வதேச விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, துபாய், சார்ஜா உள்ளிட்ட நாடுகளுக்கு தினசரி விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இவற்றில் இலங்கை தவிர மற்ற நாடுகளுக்கு தினசரி 1 முதல் 4 சேவைகள் உள்ளன.

ஆனால் இலங்கைக்கு விமானங்களை இயக்கும் ஶ்ரீலங்கன் விமான நிறுவனம் தினசரி 1 என்ற வகையில் வாரந்தோறும் 7 சேவைகளை மட்டுமே இயக்கி வந்தது.

அதன்படி வாரத்தில் செவ்வாய், புதன், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.10 மணிக்கு இலங்கையிலிருந்து வரும் விமானம் 10.10 இற்கு மீண்டும் இலங்கை செல்லும்.

இதுபோல திங்கள், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 3.05 மணிக்கு இலங்கையிலிருந்து வரும் விமானம் 4.10 க்கு புறப்பட்டு செல்கிறது.

இந்நிலையில், வியாழக்கிழமைகளில் காலையும் இலங்கைக்கு கூடுதல் விமானச்சேவை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழர் சம உரிமை இயக்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியிடப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் சம உரிமை இயக்கத் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு சம நேரத்தில் யாழின் கீரிமலையிலும் வன்னியின் ஒட்டுசுட்டானிலும் வெளியிடப்படவுள்ளது.

யாழில் காங்கேசன் துறைத்தொகுதி வேட்பாளர் பல்கலைக்கழக மாணவி செல்வி டியினியா ஜெகதாஸ் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் தேர்தல் விஞ்ஞாபனத்தை முதன்மை வேட்பாளர் கலாநிதி தே.தேவானந்த் வெளியிட்டு வைப்பார்.

வன்னியில் முதன்மை வேட்பாளர் க. கருணானந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முல்லைத்தீவு வேட்பாளர் தமிழ்த் தேசியப்போராளி த.யோகானந்தன் (ஆனந்தன்) வெளியிட்டு வைப்பார். (ம-7)

## நோவிலும் வாழ்வு நூல் அறிமுகம் இன்று

வசிகரன் எழுதிய நோவிலும் வாழ்வு நூல் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல-128, டேவிட் வீதி, கலைத்தூது அழகியல் கல்லூரி மண்டபத்தில் மூத்த எழுத்தாளர் கருணாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் எழுத்தாளர்களான கருணாகரன், குணேஸ்வரன் மற்றும் கவிஞர் வட்டக்கச்சி வினோத் ஆகியோர் கலந்து கொண்டு உரைகள் ஆற்றவுள்ளனர். (ம-7)

### வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை 01 - 30, 2024**

**"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்.**

-தோமஸ் புல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்குண்டு

- யாழ். நல்லூர் கோயிலுக்கு அண்மையில் நல்லூர் குறுக்கு வீதியில் குறுக்கு வீதி முகப்புடன் 11 பரப்பு காணி விற்பனைக்கு.
- யாழ். வைத்தியசாலை வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 20 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட காணித்துண்டு விற்பனைக்கு.
- யாழ். பலாலி வீதியில் பலாலி வீதி முகப்புடன் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 100 அடி அகலமும் 250 அடி நீளமும் கொண்ட 5 பரப்பு காணி விற்பனைக்கு.
- யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்பு காணி விற்பனைக்கு.
- யாழ். சிவன் கோயில் பின் வீதியில் மானிப்பாய் வீதியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு.
- யாழ்.K.K.S வீதியில் தெருவடிப்பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் ஆசீர்வாதம் புத்தகசாலைக்கு அருகில் 20 அடி அகலமும் 160 அடி நீளமும் கொண்ட 3 மாடிக் கடை விற்பனைக்கு.
- யாழ்.மின்சார நிலைய வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட ஒரு மாடிக் கடை விற்பனைக்கு.
- யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடை விற்பனைக்கு.
- யாழ். பிறவுண் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு.
- யாழ். விக்டோரியா வீதியில் 12 பரப்பு, 16 பரப்பு கொண்ட இரண்டு காணியும் விற்பனைக்கு.
- யாழ்.அல்லைப்பிட்டியில் 2 ஆம் வட்டாரத்தில் 10 ஏக்கர் காணியும் மாடி வீடும் விற்பனைக்குண்டு.

(C-1510)

077 7232 535


# விடுவிக்கப்பட்ட வீதியை பார்வையிட்ட ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட இராணுவ தலைமையகத்தில் நேற்று வடக்கு ஆளுநர், யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் பலாலி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்படுகின்ற வீதி, காணிகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் பல்வேறுபட்ட விடயங்கள் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன் பொதுமக்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் உதவிகள் மற்றும் சேவைகள் தொடர்பான விடயங்களை விரிவாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் இறுதியில் ஆளுநரால் மரக்கன்று நடுகை மேற்கொள்ளபட்டது. பின்னர் விடுவிக்கப்பட்ட பலாலி - அச்சுவேலி பிரதான வீதியை வட மாகாண ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார். (6-8-33)



# சோழியபுரம் பத்ம வெளியீடு

அனைத்து ஜே.வி.பி.தோழர்களே!

அன்றைய தலைவர் மாண்புமிகு தோழர் ரோஹண விஜேவீர அவர்களின் உரை...

அன்று(1976) சுன்னாகம் பொது மைதானத்தில்...

அன்று (12.07.1976) அவிசாவளை பொது மைதானத்தில்...

இவ்விரு இடங்களிலும் உரையாற்றும் போது இந்நாட்டில் வாழுகின்ற சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களும் சம உரித்துடையவர்கள். தமிழினத்திற்கு சுய நிர்ணய உரிமை உண்டு. விரும்பினால் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழலாம் விரும்பாவிட்டால் தமிழினத்திற்குப் பிரிந்து வாழும் உரிமையும் உண்டு என்றே கூறினார்.

மறைந்த மாபெரும் தேசியத் தலைவன் இலங்கைத் தமிழர் பற்றிய உரையைக் கேட்டீர்கள் தானே.நானும் தோழர் விஜேவீர அவர்களின் உரையைச் சுன்னாகத்திலும் (12.07.1976)எகலியகொடையில் ஆசிரியராகப் பணிபுரிந்த போதும் அவிசாவளை பொது மைதானத்திலும் நேரில் பார்த்தேன். கேட்டேன். அவர் ஏனைய சிங்கள அரசியல் தலைவர்களைப் போன்று வடக்கில் ஒரு வகையான பேச்சும் தெற்கில் இன்னொரு வகையான பேச்சும் பேசவில்லை. எங்கும் அவரின் பேச்சு ஒரே அர்த்தப்படவே இருந்தது.

இவ்வாறான தெளிவான சுயநலமற்ற சிங்கள அரசியல் சித்தாந்தத்தை தனது கொள்கையாகக் கொண்ட மாபெரும் தலைவனுக்கு தமிழ் மக்களே ! நீங்கள் செய்யும் கைமாறு தான் என்ன? ஜே.வி.பி தோழர்களே! இலங்கைத் தமிழர் பற்றிய அவரின் கொள்கையை நீங்களும் கடைப்பிடிப்பதே மறைந்த மாபெரும் தலைவனுக்கு உங்களால் செய்யக்கூடிய கைமாறு ஆகும்.

சிங்கள மக்களே! சிங்கள மக்களே! மறைந்த தோழர் மாபெரும் தேசியத் தலைவனின் இலங்கைத் தமிழர் பற்றிய கொள்கை நிலைப்பாட்டைக் கேட்டீர்கள் தானே.நாட்டில் காணப்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் புத்த தர்மத்திலே தீர்வு காணலாம் என்று அன்று புத்த பகவான் போதனை செய்தாரல்லவா! ஆம் அப்ப டியானால் சிங்கள பௌத்தர் ஒவ்வொரு வரும் பகவானின் போதனைப்படி நீண்ட தமிழர் இனப்பிரச்சினைக்கு முதலில் சுய பரிசோதனை செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் தீராத இனப் பிரச்சினைக்கு தீர்வை கண்டு பிடிக்க முடியும். உலகை தத்துவத்தை போதித்த புத்த தர்மத்திலே நாட்டிலுள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு. வேறு எங்கும் போகத்தேவையில்லை. எனவே நீண்ட தமிழர் இனப்பிரச்சினைக்கு தற்போதைய நிலையிலே உடனடி அரசியல் தீர்வைக் கண்டுபிடிப்பது சிங்கள மக்களின் தலையாய கடமை ஆகும். காலம் கடந்தால் நாடு பறிபோவது நிச்சயம். காலம் கடந்த பின் கண்விழிக்காதே. நினையுங்கள். சிந்தியுங்கள்! தெளியுங்கள் ! உணருங்கள்!

**ஸ்ரீலங்கா கடற்படைத்தளபதியும் பறாளாய் ஆலய தரிசனமும்.**

கடந்த வெள்ளிக்கிழமை (25.10.2024) ஸ்ரீலங்காவின்முன்னாள் கடற்படைத்தளபதி சந்திரகிரி என்பவர் பறாளாய் ஆலய தரிசனத்திற்காக வருகை தந்திருந்தார்.

முதலில் பறாளாய் முருகன் ஆலயத்தை தரிசத்து விட்டு பின்னர் ஈசுர விநாயகர் ஆலயத்திற்கு வருகை தந்தார்.

முன்னொரு முறை முருகன் ஆலயத்திற்கும் வந்ததாகக் கூறி. ஐயா எங்களை ஆசிர்வதிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டே வருகை தந்தார்.

அவரை வரவேற்று அவரது பெயராலே அர்ச்சனை செய்து காளாஞ்சி கொடுத்து ஆசீர்வதித்தேன். போர்த்துக்கேயர் காலத்து கண்ணைக் கொத்திக் காக்காப்பிள்ளையார் சோழியபுரத்தின் சிறப்புக்கள் யாவற்றையும் கூறி ஈசுர விநாயகரின் புதுமைகளையும் கூறினேன். எமது மக்களின் இனப் பிரச்சினைக்கு உடன் அரசியல் தீர்வு வேண்டும் . தவறினால் நாடு பறிபோகும் எனவும் கூறினேன். அது எப்படி என்று கேட்டார்.

நான் ஒரு ஆன்மீகவாதி. எனது 33 வருட ஆன்மீகப் போராட்டத்திலே நான் பெற்ற பெறுபேறுகளையே கூறுகின்றேன். சாமி கூறிய வேறு சம்பவங்கள் உண்டா? ஆம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு அடியேன் ஒரு அவசர செய்தி அனுப்பியிருந்தேன். அதாவது தேர்தலைப் பிற்போட்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உடனடி அரசியல் தீர்வைக் காண வேண்டும். தவறினால் நாடு பறிபோவது நிச்சயம் என்பதாகும்.

ஐயா கூறியவாறு அவரை விட்டு ஆட்சி பறிபோய்விட்டது என்றேன் ஆச்சரியம் அடைந்தார். எமது மக்களின் இனப் பிரச்சினைக்கு உடன் அரசியல் தீர்வு வேண்டும். தவறினால் நாடு பறிபோகும் என மீண்டும் கூறினேன். யாவற்றையும் கேட்டுக்கொண்டார். சாமி இன்னொருமுறை உங்களுடன் கதைப்பதற்கு வருவேன் என வணக்கம் கூறி சென்று விட்டார்.

**சாமியாரைச் சோதித்த அரசன்...**

அரசனுடைய குணம் எதையும் நம்பமாட்டார். இது அவரது சுபாவம். சாமியார் ஒருவர் சொல்வது நடக்கின்றது என்பதை அறிந்துவிட்டார். உடனே சாமியாரை அரண்மனைக்கு அழைக்கின்றார். நீர் சொல்வது நடக்கின்றது என்று கதை உலாவுகிறது. சரி இன்றைக்கு எனக்கு என்ன நடக்கும் என்றும் சொல்லும் பார்க்கலாம் என்று கேட்கின்றார். ஒன்றும் யோசிக்காமல் நீங்கள் இன்று பாயாசம் குடிப்பீர்கள் அரசே என்றார் சாமியார். அப்படியே ஆகட்டும் என்று கூறி சாமியாரை அனுப்பிவிட்டு, கடுமையாக யோசித்துவிட்டு இங்கே இருந்தால் தானே பாயாசம் குடிக்க வேண்டி வரும் என்று நினைத்து மாறு வேடம் போட்டு காட்டிற்குச் செல்கின்றார். அங்கே ஒருவருக்கும் தெரியாமல் மரத்தில் ஏறி மறைந்திருக்கின்றார். எதற்காக? சாமியாரைச் சோதிப்பதற்காக. அந்த வழியே வியாபாரிகள் நெடும் பயணம் நடை நடையாகப் போய் வருவார்கள். அப்படி அவர்கள் வந்து கொண்டிருக்கும் போது பசிவந்துவிட்டது. அதனால் மரத்தடியில் கல்லை வைத்து பாயாசம் காய்ச்சினார்கள். அந்த நேரம் திருடர்கள் வரும் சத்தம் கேட்க வியாபாரிகள் பணம் வைத்திருப்பதால் பாயாசத்தை விட்டு விட்டு ஓடி விட்டார்கள். இவற்றையெல்லாம் மரத்திலிருந்து அரசன் பார்த்துக் கொண்டிருக்கின்றார். திருடர்களுக்கும் பசி ஆனால் பாயாசத்தைக் குடிக்கப் பயமாக இருக்கின்றது.

யாரும் வந்தால் அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்துவிட்டு அவர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்றால் நாங்கள் குடிப்போம் என்று பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். மரத்திற்குக் மேலே ஒருவன் பார்த்தான்.

அப்போது மரத்தில் இருந்த அரசனைக் கண்டுவிடுவான். உடனே மரத்தில் ஒருவன் நிற்கின்றான் ஓடி வாருங்கள் என்று கூப்பிடுவான். அரசனை இறக்கி பாயாசத்தைக் குடிக்கச் சொல்லிக் கொடுப்பார்கள். அரசனும் தன்னால் முடிந்தளவு வேண்டாம் வேண்டாம் என்று சொல்லி தடுக்கின்றார். உடனே படுக்க வைத்துப் பருக்கினார்கள். அரசன் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் குடித்து விட்டார். அரசனில் ஒரு மாற்றமும் தெரியாததால் தாங்கள் எல்லோரும் பாயாசத்தைக் குடித்து விட்டு திருடர்கள் சென்று விட்டார்கள். அரசன் சாமியாரைத் தேடிச் சென்று அவரை வணங்கி பொற்காசு கொடுத்தார். சாமியார் வேண்டாம் என்று மறுத்து விட்டார்.

எனது ஞான வாக்கிற்கு பெறுமதி கிடையாது. அளப்பரியது. நீங்கள் உணர்ந்தால் அதுவே போதும் என்று கூறி அரசனை அனுப்பி வைத்தார். பார்த்தீர்களா அரசனுக்கே பெரிய சோதனையாகிவிட்டது. நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வில். லட்சியம் நிச்சயம் வெல்லும் ஒரு நாளில். எனவே அரசனைப் போல் நீங்களும் ஐயாவை நினைத்துக் கொண்டிராமல் ஐயா காட்டுகின்ற வழியில் ஈசுர விநாயகரை சதா நினையுங்கள், வணங்குங்கள் அவர் திருப்பாதம் போற்றி! போற்றி! போற்றி!.

(2546)

**"பார் தெரியுது பறாளாயான் பதி"**
**பக்தர் குறைதீர்க்கும் சந்நிதி"**

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
[ஆன்மீகவாதியும் ஓய்வுநிலை ஆசிரியரும்,பரம்பரைப் பரிபாலகரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்...

வாரத்தில் 5 நாட்களுக்கு இயக்கப்படும் என கப்பல் போக்குவரத்து நிர்வாகம் அறிவித்துள்ளது.

நாகை - இலங்கை இடையேயான சிவகங்கை என்ற பயணிகள் கப்பல் சேவையானது கடந்த ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி ஆரம்பமானது.

முதலில் தினந்தோறும் இரு மார்க்கத்திலும் இயக்கப்பட்ட நிலையில் பயணிகள் முன்பதிவு குறைவாக இருந்ததால் வாரத்தில் செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய மூன்று நாட்களாகக் குறைக்கப்பட்டு இயக்கப்பட்டது.

அதன் பின்னர் சனிக்கிழமை உட்பட 4 நாட்களாக கப்பல் சேவை நீடிக்கப்பட்டதுடன் பயணிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்று முன்பதிவும் அதிகரித்தது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் வாரத்தில் 5 நாட்கள் கப்பலை இயக்க கப்பல் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 8ஆம் திகதி முதல் வெள்ளிக்கிழமைகளிலும் கப்பல் போக்குவரத்துச் சேவை மேற்கொள்ளப்படும் என 'சிவகங்கை' கப்பல் போக்குவரத்து நிறுவனம் அறிவித்துள்ளது.

(ம-7)



















## 12 எருமை மாடு...

செல்லப்பட்ட 12 எருமை மாடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

முறையான அனுமதிப் பத்திரமின்றி குறித்த மாடுகள் கொண்டு செல்லப்பட்டமை விசாரணையின் போது தெரியவந்ததையடுத்து, 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான 12 எருமை மாடுகளும் மீட்கப்பட்டதுடன் அதனைக் கொண்டு சென்ற லொறி சாரதியான மொனராகலைப் பகுதியைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டார்.

(ம-7,250)

## மாவீரர் துயிலு...

போது ஆரம்பமாகியுள்ளன.

தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினால் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது பொதுச் சுடரேற்றி மலர் தூவி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, அதன் பின்னர் சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலர் இந்த சிரமதானப் பணிகளில் கலந்துகொண்டனர். (ம-7)

## ஆட்சி கவிழும்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்டபூர்வமாக வழங்கப்படவேண்டிய வரப்பிரதாசங்கள் , பாதுகாப்பு எல்லாம் வழங்கப்பட்டுள்ளன. அளவுக்கு அதிகமாக எதையும் வழங்க வேண்டியதில்லை.

180 இராணுவத்தினர், படையினர் எல்லாம் எதற்கு? தேவையற்ற விடயங்களை வழங்க வேண்டியதில்லை. இந்த அரசால் பயணிக்க முடியாது என ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு காண்கின்றார்.

இதற்கு முன்னரும் அவர் கனவு கண்டார். டொலர் 400 ரூபாய் வரை அதிகரிக்கும் என்றெல்லாம்கூட கூறினார். இன்று டொலர் பெறுமதி குறைவடைந்துள்ளது.

கனவு காணும் உரிமை அவருக்கு உள்ளது. நன்றாகக் கனவு காணட்டும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும் நகைச்சுவைத்தனமான கருத்துக்களைக் கூறி வருகின்றார். அவரின் கருத்துக்களை மக்கள் ஏற்கமாட்டார்கள்" என்றார். (ம-7)

## நல்லூர்...

நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபையில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றும் பாலசுந்தரம் டிலுசன் (வயது-43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் சடலத்தினை மீட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறி[illegible]

உடற்கூற்று [illegible]

# 1342 தேர்தல் முறைப்பாடு பதிவு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் 1,342 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில், தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 352 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதேநேரம், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய 990 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(ம-7)

சுருக்கிட்டதனாலயே மரணம் சம்பவித்தமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## மக்கள் அபிலாசை...

ளார்.

கெஸ்பேவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கிய தற்போதைய ஜனாதிபதி மக்களின் எதிர்பார்ப்புகளை உச்ச நிலைக்குக் கொண்டு வந்தார்.

மின் கட்டணத்தை 66 சதவீதம் குறைக்கலாம் என்று தெரிவித்தார்.

உணவுப் பொருட்களின் விலையையும் குறைப்பதாகக் கூறியிருந்தார்.

ஆட்சிக்கு வந்தும் அவர் கூறியவாறு அதனைக் குறைக்கவில்லை.

இவற்றைச் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் தேவையில்லை.

அதிக ஊழல் காரணமாகவே மின் கட்டணம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவித்திருந்தார்.

நாட்டில் நிலவிக் கொண்டிருக்கும் பெரும்பாலான பிரச்சினைகளை விரைவில் தம்மால் தீர்க்க முடியும் என்றும் கூறினார்.

எனினும், ஆட்சிக்கு வந்து இன்று வரை அவரால் மின் கட்டணத்தைக் குறைக்க முடியவில்லை.

தேர்தல் காலப் பகுதியில் மக்களின் எதிர்பார்ப்புகளை உச்சத்துக்குக் கொண்டு வந்து, இன்று ஆட்சிக்கு வந்தும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது, மக்கள் அபிலாஷைகளை சிதைத்துள்ளார் என [illegible] (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WEC COLLEGE

விசா ஆலோசனை மையம்

கடந்த 14 வருட்காலமாக யாழ் மண்ணில் சிறந்த சேவைகளை வழங்கிவரும் முன்னணி நிறுவனத்தினூடாக உங்கள் உயர்கல்வியினை மேலைத்தேய நாடு ஒன்றில் தொடர விருப்பமா?

## STUDY IN UK

CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND

20வருட அனுபவம் ஆளுமை நேர்த்தியுடன் கூடிய வளவாளர்களின் நெறிப்படுத்தலுடன்

## IELTS

UKVI ACADEMIC/GENERAL-Computer
ACADEMIC / GENERAL-Computer Base
ACADEMIC / GENERAL - Paper Base
IELTS Life Skills - A1/A2/B1/B2

அலுவலகங்கள்:
WEC College
ஆரியகுளம், யாழ்ப்பாணம், மற்றும் சாவகச்சேரி (C-1511)

**0779265447/ 0217200989**

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

**Practical to UKVI on Computer**

(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970** (2508)

## பிரதமர் முல்லைக்கு விஜயம்



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய நிகழ்வாக, "நாட்டைக் கட்டியெழுப்பும், நாம் ஒன்றாக திசை காட்டிக்கு" எனும் கருப்பொருளில் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு அதிதியாக பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

நீங்களும் விரைவில் அமெரிக்காவில். நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன (05.11.2024 செவ்வாய்க் கிழமை)

## அமெரிக்க அதிஸ்ட விசா

[illegible]

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

0768226244

55000 இலவச விசாக்கள்



V2 Travels

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351 |
| 0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675 |
| 0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322 |
| 0764550671 | 0776699892 | 0768226236 | | 0768226230 | 0776697960 |

# காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரப் பகுதியில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஏறத்தாழ 100m தொலைவில் 4.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வர்த்தகர்களுக்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த நிலப்பரப்பாகும். **முகவர்கள் தேவையில்லை.**

பி.ப 4 மணிக்குப் பின் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

**075 777 1885** (513)

# பகுதி நேர / முழுநேர தொழில் வாய்ப்பு

ஓய்வூதியக் கணக்கு / முதலீட்டுக் கணக்கு ஆகிய பிரிவுகளுக்கு

**வியாபார மேம்பாட்டு அலுவலகர் (B.P.O)**

வேலை நிரந்தரமானது.

ஆரம்பக் கொடுப்பனவு : ரூபாய் 15,000/=

வயது எல்லை : 18 - 40 வயது வரை

வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் உங்கள் சுயவிபரத்தினை (Bio Data)

**076 631 4110/ 076 0261 099/ 077 6712 906** என்ற இலக்கங்களுக்கு Whatsapp செய்ய முடியும் அல்லது

**Regional Manager,
Community Developing channel,
No.237, Stanly Road, Jaffna.**

எனும் தபால் முகவரிக்கு அனுப்பவும்.

முடிவுத்திகதி : 15.11.2024

**IRCSL IBSL BANKING EXAM PASS**

உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். (2537)

# விற்பனைக்கு

கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

**7 பரப்பு 15 குழி நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.**

(தரகர் தேவையில்லை)

**077 732 8583
077 412 1657** (2539)

தொண்டு சேவையாக (எது வித கட்டணமும் இன்றி) SCANDI LANKA TRAVELS ஆகிய நாம் இலவச அமெரிக்க லொத்தர் விசாவிற்கான (USA GREEN CARD LOTTERY VISA)விண்ணப்பங்களை இனாமாக எதுவிதபின் கட்டணமும் இன்றி நிரப்பிக் கொடுக்கின்றோம். நீங்கள் உங்கள் அதிஷ்டத்தை எங்கள் தொண்டு சேவை மூலம் முயற்சி செய்து பார்க்கலாம்.

தொடர்புகளுக்கு : 077 725 2567 (2532)

**SCANDI LANKA TRAVELS**

702, கனடா நட்புறவு வீதி(விமான நிலைய வீதி) கட்டுநாயக்கா.

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

**075 498 5400
077 937 0000
021 221 7600** (508)

## மணமகள் தேவை

1986 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தச்சு நிறுவன முதலாளிக்கு வரன் தேடப்படுகிறது.

**075 559 3232** (2513)

## கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ.து) மூளாய் விண்ணப்பம் கோரல்

**நிர்வாக உத்தியோகத்தர் (Administrative officer)**
- பட்டதாரி - 05 வருட துறைசார் அனுபவம்/ க.பொ.த (உ/த) சித்தியுடன் 10 வருட அனுபவம்
- நிர்வாகம் சார்ந்த முன் அனுபவம்
- கணனியில் சித்தியும் முன் அனுபவமும்
- முகாமைத்துவம் சார்ந்த அனுபவம்
- மொழிகளில் சிறந்த ஆற்றல்
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது

**குடும்ப நல உத்தியோகத்தர் (Midwife)**
- க.பொ.த(உ/த) சித்தி, மகப்பேற்று சித்தி தகைமை சான்றிதழ்
- மகப்பேற்று விடுதியில் ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**இரத்தம் எடுப்பவர் (Phlebotomist)**
- க.பொ.த(உ/த)சித்தி
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**தாதிய உத்தியோகத்தர் - ஆண், பெண்**
- தகைமை பெற்றவர்கள்
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**சுகாதார உதவியாளர் - ஆண், பெண்**
- க.பொ.த(சா/த) சித்தி
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (IT/Marketing officer)**
- துறை சார்ந்த சித்தி தகைமை சான்றிதழ்
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (e-mail) 20.11.2024 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு இடம்பெறும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், மூளாய், சுழிபுரம்.**

**E-mail : moolaii@yahoo.com**

**தொலைபேசி இலக்கம் : 021 225 0441, 021 225 0771**

**தலைவர்/ செயலாளர்
கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், மூளாய்.** (2505)

## தென்னிந்திய தலயாத்திரை

12 நாட்கள் | 35 + ஆலயங்கள்

திருப்பதி, அறுபடை வீடுகள், பஞ்சபூத தலங்கள், நவக்கிரக கோயில்கள் உள்ளடங்கலாக 35 இற்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம்.

## ஷீரடி சாய் பாபா தரிசனம்

5 நாட்கள்

ஷீரடி சாய்பாபா பக்தர்கள் ஷீரடி சென்று சாய்பாபாவை தரிசித்து அருளாசிகளைப்பெற ஒரு வாய்ப்பு

**கட்டணத்தில் உள்ளடங்குபவை**

- விசா
- விமானப் பற்றுச் சீட்டுகள்
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு
- தேநீர்/ பழச்சாறு
- சுற்றுலா மேலாளர்
- சிறப்புத் தரிசன நுழைவுச் சீட்டுக்கள்

பாதுகாப்பான மற்றும் சௌகரியமான பிரயாணங்களுக்கு சிறந்த தெரிவு

**SRIBABY TRAVELS & TOURS**


**076 946 4568**

**1/1-220, Stanly Road, Jaffna.** (511)

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= Max 3Kg | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg றவை | - 284/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 780/= | |
| 1Kg கீரி சம்பா | - 250/= | |
| 1Kg சம்பா | - 226/= | |
| 1Kg பயறு | - 659/= | |
| 1Kg சோயா | - 440/= | |
| 750 ml நல்லெண்ணை | - 1460/= | ~~1550/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3525/= | ~~3900/=~~ |
| 180 ml Chik சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 380/= | ~~500/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |

யோகட் 48/= ~~80/=~~



400g Anchor 1000/= ~~1050/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (514)

**Happy Supermarket
0777 8080 30**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.